விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# வலம்புரி
Valampurii
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 02 திங்கட்கிழமை (18.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 242

# விடுதலைப் புலிகளின் எழுச்சிக்கு ஐரோப்பிய நாடுகள் உதவுகின்றன

## இலங்கை அரசு குற்றச்சாட்டு



(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பை கட்டியெழுப்ப ஐரோப்பிய நாடுகள் உதவியளிப்பதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சர்வதேச தளத்தில் பாரிய பிரச்சினையை எதிர்நோக்கி வருகிறது. சர்வதேசம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக பெரும் விசாரணை ஒன்றை நடத்த முயற்சித்து வருகின்றது.

ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு ஏற்கெனவே அப்படியான விசாரணையை நடத்த முயற்சித்துள்ளது.

விடுதலைப் புலிகளை இலங்கை தோற்கடித்ததே இதற்கு காரணம். ஐரோப்பிய நாடுகளே விடுதலைப் புலிகளின் சர்வதேச பிரிவை உருவாக்கின.

ஆசியாவை பிளவுபடுத்தி உலக அதிகாரத்தை தக்கவைக்கும் தேவை ஐரோப்பிய நாடுகளுக்கு இருந்தது. ஐரோப்பாவில் இருந்து பணத்தை சேகரித்து, ஆசியாவின் இந்த பகுதியில் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என்பதே எனது அரசியல் நிலைப்பாடு.

ஜனாதிபதி வீழ்ச்சியடையும்வரை அவர்களை தாக்கினார். அவர்களின் எதிர்பார்ப்பை இல்லாமல் செய்தார்.

இதனால், சார்க் பிராந்திய நாடுகள் தற்போது எந்த பிரச்சினைகளும் இல்லாது மிக வேகமாக முன னேறி வருகின்றன. 19 ஆம் பக்கம் பார்க்க....

## அமெரிக்க நிறுவனத்துடன் இலங்கை உடன்படிக்கை

(கொழும்பு)


இலங்கை அரசாங்கம் அமெரிக்காவின் எல்எல்சி எனப்படும் லிபட்டி இன்டர்நசனல் குரூப் என்ற பொதுமக்கள் தொடர்பு நிறுவனத்துடன் புதிய உடனபடிக்கை ஒன்றை செய்துள்ளது.

இதற்காக இலங்கை அரசாங்கம் 7 இலட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க டொலர்களை செலுத்த உடன்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்க உறுப்பினர்கள மற்றும் இலங்கையை அமெரிக்காவுக்குள் பிரசித்தப்படுத்துவதற்காக இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மாத ஆரம்பத்தில்செய்து கொளளப்பட்ட இந்த உடன்படிக்கையில் மத்திய வங்கி 19 ஆம் பக்கம் பார்க்க....

## அஜித்குமார் டோவல் இலங்கைக்கு விஜயம்




(புதுடில்லி)

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்குமார் டோவல் எதிர்வரும் டிசம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்வார் என எதிர பார்க்கப்படுகிறது.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில, 19 ஆம் பக்கம் பார்க்க....

## இனவாதத்தை கக்கும் பொது பல சேனா என்னை கைது செய்ய கோருவது எப்படி?

### ஞானசார தேரரிடம் மன்னார் ஆயர் கேள்வி



(கொழும்பு)

முஸ்லிம் மக்கள் மீது அடக்குமுறையையும், தமிழ் மக்கள் மீது இனவாதத்தையும் பொது பல சேனா போன்ற அமைப்புக்கள் ஏவி வருகின்ற நிலையில் சகல மதங்களையும் மேன்மையாக மதிக்கும் என்னைக்கைது செய்யக்கோருவது எந்த வகையில் நியாயமாக அமையும்? என்று மன்னார் ஆயர் இராயப்பு யோசப் கேள்வி எழுப்பியுள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப்பை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் கூறியிருந்த கருத்துக்கு பதிலளிக்கும்முகமாகவே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நாட்டையும் படையினரையும் நான் யாருக்கு காட்டிக் கொடுத்தேன்என்பதை மேற்படி அமைப்பைசேர்ந்தவர்கள்தெளிவுபடுத்தவேணடும்.

இன்று முஸ்லிம் மக்கள் மீதும் தமிழ் மக்கள் மீதும் இனவாதத்தைக கக்கி வரும்பொது பல சேனா போன்ற அமைப்புகள் மதம் என்ற பெயரால் செய்துவரும் அடாவடித்தனங்களையும் கொடுமைகளையும் நிறுத்துவதன் மூலமே இந்த நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் இன ஒற்றுமையையும் கொண்டுவர முடியும்.


உண்மையைச் சொல்கின்றவர்களை, நீதிக்காக போராடுகின்றவர்களை கைது செய்ய வேண்டுமென்றால் இந்த நாட்டில் உண்மையையும் நீதியையும் யார் காப்பாற்றுவது? பௌத்த சிங்கள நாடு என்ற இனவாதத்தைக் கக 19 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையில் 10,400 பேர் போலி மருத்துவர்கள்

(கொழும்பு)

மருத்துவர்கள் என்று கூறிசிகிச்சை அளித்து வரும் 10 ஆயிரத்து 400 போலி மருத்துவர்கள் அடையாளம் காண்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் போலி மருத்துவர்களை கணடறியும் குழுவின் தலைவர் மருத்துவர் ஹரித அளுத்கே 19 ஆம் பக்கம் பார்க்க....




அண்ணா தொழிலகத்தின் நல்லூர் உற்சவ கால விற்பனைக் கூடத்தில்

| | |
|---|---|
| அண்ணா கோப்பி | குரக்கன் மா |
| அண்ணா மிளகாய்த்தூள் | ஆட்டாமா |
| அண்ணா அரிசிமா | ஜீவகாரம் |

அண்ணா பத்தி வகைகள் போன்ற அண்ணா உற்பத்தியின் அனைத்து தயாரிப்புக்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

அண்ணாவின் புதிய தயாரிப்பான அண்ணா சாம்பிராணி

பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(நல்லூர் சிவன் கோவிலின் பின்புறம்)

## 29ஆம் திகதி மீனவர் பேச்சு

(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் அடுத்த கட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சர ராஜித சேனாரட்ன இதனை உறுதிப்படுத்தியுள்ளார். குறித்த பிரச 19 ஆம் பக்கம் பார்க்க....

## மீண்டும் மழை

(யாழ்ப்பாணம்)

வரட்சியால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட அநேகமான பகுதிகளில் மழை பெய்துவருகின்றது.

குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை உள்ளிட்ட வடக்கு கிழக்கு பகுதிகளில் நேற்று முன்தினம் முதல் பரவ 19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Solar Dc 12V - மின்சாரத்தில் இயங்கக் கூடிய
கணனிகள் விற்பனைக்கு - 20,000/-
P4 Computer (CPU) - 6500/-
15 CRT - 1500/-





JANA COMPUTER
Kilinochchi - 0777508908
(இ-8223)

வலம்புரி- சங்குநாதம்
செய்தியாளர் பதவிக்கான
விண்ணப்பம்

வடமாகாணத்தில்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- முல்லைத்தீவு
- வவுனியா
- மன்னார்

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலை முடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் வெளிக்கொண்டுவந்து தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வடபிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள- நேர்மையுடன் பணியாற்றக்கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ. இல, தொலைபேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக் கூடிய, உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக, சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

பிரதம ஆசிரியர்
வலம்புரி
இல.3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 21.08.2014**

குறிப்பு:-நேர்முகத் தேர்வு அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும்

**பிரதம ஆசிரியர், வலம்புரி**

தமிழ் புத்தகக் கண்காட்சியும்
மலிவு விற்பனையும்

தமிழ் பேசும் மக்களின் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய அரிய பொக்கிஷம்

புதுப் பொலிவு... புதிய தகவல்கள்...

பார்த்தால் வியக்க வைக்கும்... படித்தால் மனதை அள்ளும்...

**சிறப்புச் சலுகை**




(இ-8227)

(இந்திய விலையின் 1.62 முதல் 3.15 வரையான விலைகளில்)

இவற்றோடு... அழகு தமிழில்... மலிவு விலையில்...
ஆயிரக்கணக்கான புத்தகங்கள் அடங்கிய
தமிழ் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கேசவன் புத்தகக் கூடம்
ரஷ்மி புக் மார்ட், யாழ்ப்பாணம்.

இன்றே விரையுங்கள் } ரஷ்மி புக் மார்ட் முன்றலில்
யாழ்.கே.கே.எஸ் வீதி, தட்டாதெரு சந்தி,
ஒகஸ்ட் 28 வரை மட்டுமே

0772228980
கேசவமூர்த்தி

வளலாய் - அக்கரை கிராமத்தில்

# வாழ்வாதார உதவிகள் இன்றி 98 குடும்பங்கள் நிர்க்கதி வாழ்வு




யாழ்.கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வளலாய் - அக்கரை கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்ட 98குடும்பங்கள் வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகள் எவையுமில்லாமல் திறந்தவெளியில் கடற்கரை வெயிலில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் தங்கள் நலன்களில் அக்கறை செலுத்தாமலுள்ளதாக மீள்குடியேறிய மக்கள் கூறியிருக்கின்றனர்.

கடந்த 1984ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக வலி.கிழக்கு பிரதேச எல்லைக்குட்பட்ட வளலாய் - அக்கரை கிராமத்திலிருந்து மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்தனர். பின்னர் 1990 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் வெளியேறிய பின்னர் 3 மாதங்கள் மீண்டும் மக்கள் தங்கள் சொந்த இடத்திற்கு திரும்பிச் சென்று வாழ்ந்திருந்தனர். அப்போது மக்களுடைய வீடுகள் இருந்தன.

மீண்டும் உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்த நிலையில் மக்கள் மீள இடம்பெயர்ந்து யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் வாழ்ந்து வந்த நிலையில் வலி.வடக்கு தொடக்கம் வலி.கிழக்கு பகுதி வரையிலான உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் மக்கள் தமது சொந்த நிலங்களில் மீள்குடியேற முடியாமல் போனது. இந் நிலையில் கடந்த 2013ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 7ஆம் திகதி, அக்கரை கிராம மக்கள் அவர்களுடைய சொந்த நிலங்களில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் 2014ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே மக்கள் அவர்களுடைய சொந்த நிலங்களில் மீள்குடியேறினர். மீள்குடியேற்றத்தின்போது 12தகரங்கள் மற்றும் 8சீமெந்து பைகள் மட்டுமே வழங்கப்பட்டது. அவற்றைக் கொண்டு அமைக்கப்பட்ட அரைநிரந்தர வீட்டிலேயே கடந்த 8மாதங்களாக மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எனினும் அந்த மக்களுக்கு மலசல கூடம், குடிதண்ணீர், போக்குவரத்து உளளிட்ட அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாததுடன், வாழ்வாதார உதவிகளும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. குறித்த கிராமத்திலிருக்கும மக்கள் கடந்த 8மாதங்களாக அருகில் உள்ள பற்றைக்காடுகளையே மலசல கூடமாக பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் மிகப்பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மேலும் மக்கள் குடியேற்றப்பட்டதன் பினனர் அவர்களாக குடிசைகளை அமைத்து குடியேறிய இடங்களில் அகற்றப்படாத வெடி பொருட்கள் அதிகளவில் காணப்பட்டுள்ளது.

அவ்வாறு வெடி பொருட்கள் அகற்றப்படாமலிருந்த பகுதிகளில் மக்கள் விறகு வெட்டுவதற்கும், போக்குவரத்திற்கும் பயன்படுத்திக் கொண்டிருந்த நிலையிலேயே அப் பகுதியில் வெடிபொருட்கள் உள்ளமை கண்டறியப்பட்டு பின்னர் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு தெரியப்படுத்தியதையடுத்து கண்ணிவெடியகற்றும் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்றின் உதவியுடன் இப்பகுதியில் கண்ணிவெடியகற்றல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு ஒரு ஷெல் மற்றும் 200 வரையான கண்ணிவெடிகள், மக்களுடைய குடிமனைகளுக்கு மிக அருகிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர். எனினும் மக்களுக்கு வெடி பொருட்களால் எவ்விதமான பாதிப்பும் உண்டாகியிருக்கவில்லை.

மேலும் குறித்த கிராமத்தில் 50 வீதமான மக்கள் கடற்றொழிலை தமது அடிப்படை வாழ்வாதார தொழிலாக கொண்டிருக்கின்றனர். 25 வருடங்களுக்கும் மேலாக இடம் பெயர்ந்து வாழ்ந்து, மீண்டும் எதுவுமே இல்லாமல் மீள்குடியேறியிருக்கும் தமக்கு கடற்றொழிலுக்கான தொழில் உபகரணங்கள் எவையுமே வழங்கப்படாத நிலையில் கரையில நின்று மீன்பிடிக்கும் வீச்சு தொழிலை நம்பியே வாழ்வாதாரத்தை நடத்திக் கொண்டிருப்பதாக மக்கள் கூறுகின்றனர். இதேவேளை குறித்த கிராமத்தில் குடிநீர் முழுமையாக இல்லாத நிலையில் வலி.கிழக்கு பிரதேச சபையிடம் குடிநீருக்காக பல தடவை கோரிக்கை விடுத்தபோதும் எவ்விதமான உதவிகளும் செய்யவில்லை என குற்றம்சாட்டியிருக்கும் மக்கள், தொண்டைமானாறு பகுதியில உள்ள தனியார் ஒருவரினாலேயே தண்ணீர் விநியோகம் செய்யப்படுவதாகவும் அது தமது தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை எனவும் மக்கள் கூறுகின்றனர்.

மேலும் குறித்த கிராமத்திலுள்ள சுமார் 31 குடும்பங்களுக்கு சுவிஸ் நாட்டின் நிறுவனம் ஒன்றினால், வீட்டுத்திட்டம் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட குடும்பங்களில் சிலர் சொந்த இடத்தில் நிரந்தரமாக இருக்காமல் இடம்பெயர்ந்து வாழ்ந்த இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இதனால் நிரந்தரமாக சொந்த இடத்தில் வாழாத மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்க முடியாது என வீட்டுத்திட்டம் வழங்கும் நிறுவனம் கூறியிருக்கின்றது.

ஆனால் மீள்குடியேற்றப்பட்ட இடத்தில் அடிப்படை வசதிகளே இல்லாத நிலையில் எவ்வாறு மீள் குடியேறி வாழ்வது? என கேள்வி எழுப்பியிருக்கும் மக்கள் மிக முக்கியமாக நிரந்தர வீடு தேவையான பலருக்கு வீடுகள் வழங்கப்படவில்லை எனவும் குற்றம்சாட்டியிருப்பதுடன், திறந்த வெளியில் கடற்கரை வெயிலில் தகரக் கொட்டில்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமது நலன்களை பொறுப்புவாய்ந்தவர்கள், கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என மக்கள் உருக்கமாக வேண்டுகோள்விடுத்துள்ளனர். (செ-4)

உடனடி **வேலைவாய்ப்பு**

எமது அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கிளைகளுக்கு O/L, A/L படித்த இளைஞர்கள் தேவை!

- பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர தொழில்வாய்ப்பும்,
- வெளிநாட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்
- பயிற்சியின் போது 12,000/- பின் 40,000/- More
- வயதெல்லை 18-35
- தங்குமிட வசதிகள் உண்டு



(C-8230)

இன்றே அழையுங்கள்:
077 8794077, 0775566224, 0213203687

புதிய வாய்ப்புக்கள் அதிரடியான
உற்சவகாலக் கட்டணச் சலுகைகளுடன்

- UK படிக்க உழைக்க IELTS தேவையில்லை. 50 ஆயிரம் கட்டணக் குறைப்பு - ஒருவர் மட்டுமே. 19.08.2014 மட்டும்.
- கனடா படிக்க உழைக்க 3 வருட விசா 2 இலட்சம் கட்டணக் குறைப்பு. 3 பேருக்கு மட்டுமே.
- செங்கென் விசா - சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி... 100 வீத விசா உறுதிப்பாட்டுடன் - ஒரு இலட்சம் கட்டணக் குறைப்பு.
- சைப்பிரஸ், நியூசிலாந்து படிக்க உழைக்க IELTS தேவையில்லை.
- Visit Visa, Student Visa, Sponsor

10000/- கட்டணக் குறைப்புடன் முடிவு - 20/08/2014

(அனைத்தும் நிபந்தனைகளுக்கமைவாக)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



(7436)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. கமிட்டி அமர்வுகளில் இலங்கையிடம் பல கேள்வி!

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கமிட்டி அமர்வுகளில் இலங்கை விவகாரம் குறித்து கேள்வி எழுப்பப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கமிட்டியின் 112 ஆம் அமர்வுகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையில் அமர்வுகள் நடைபெறவுள்ளன.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பொதுமக்கள் உயிரிழப்புக்கள் தொடர்பிலான இராணுவ நீதிமன்ற விசாரணைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து அமர்வுகளின் போது கவனம் செலுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை, புருண்டே, ஹெய்ட்டி, மொல்டா, இஸ்ரேல் உள்ளிட்ட பல நாடுகள் தொடர்பிலான விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட உள்ளது.இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து ஏற்கனவே அரசாங்கம் அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளது.

2003 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கான அறிக்கை இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து அப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பூரண சுதந்திரத்தை அனுபவித்து வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு உரிய தண்டனை விதிக்கப்பட்டுள்ளனவா, சட்டம் ஒழுங்கு உரிய முறையில் அமுல்படுத்தப்படுகின்றதா? பாரியளவிலான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஐக்கிய நடுகள் அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

சனல்4 ஊடகத்தினால் வெளியிடப்பட்ட ஆவணப்படங்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பல் விளக்கம் அளிக்கப்பட வேண்டுமென மனிதவுரிமை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் அரசியல் ரீதியான பழிவாங்கல் என சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்கும் அரசாங்கம் பதிலளிக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

சிறுபான்மை சமூகத்தினர் ஒடுக்கப்படுவதனை தடுப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை தவிர்க்க எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது குறித்து விளக்கமளிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது. (6)

# விவசாய அமைச்சின் கண்காட்சி நல்லூரில்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் திருவிழாவை முன்னிட்டு வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால் நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு கண்காட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளது. சூழலியல் விவசாயத்தை நோக்கி என்னும் கருப்பொருளில் அமைந்த இந்தக் கண்காட்சியை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையின் விளையாட்டுத் திடலில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நேற்று முன்தினம் திறந்து வைத்துள்ளார்.



சேதனப் பசளைகள், மண் இதமாக்கிகள்,யாழ்.மாவட்டத்தின் நீர்வளங்கள், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நீர்ப்பாசன முறைகள், விவசாயச்சூழலில் நீர் மாசடைவதைத் தடுக்கும் வழிகள், உயிரியல் முறையில் பீடைகளைக் கட்டுப்படுத்தும் முறைகள், தாவரப் பீடை நாசினிகளின் தயாரிப்பு, அருகிவரும் பாரம்பரிய நெல் இனங்கள், இலை மரக்கறி வகைகளின் முக்கியத்துவம், காளான் வளர்ப்பு போன்ற இன்னும் அநேக சூழலுக்கு நட்பான விவசாயச் செயன் முறைகளை உள்ளடக்கியதாக பொதுமக்களும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


மேலும், யாழ்கோ நிறுவனத்தின் பால் உற்பத்திப் பொருட்கள், பழமுதிர் சோலை நிறுவனத்தின் பழ உற்பத்திப் பொருட்கள், நல்லின தென்னை, மா, பலா, பப்பாசி போன்ற தாவரங்களின் விற்பனை மையங்களும் கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டில் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படும் விவசாய இரசாயனங்களால் சூழல் நஞ்சாகி வரும் அதேசமயம் அதிக அளவு நீரை விவசாயத்துக்குப் பயன்படுத்தி வருவதால் நன்னீருக்குப் பாரிய தட்டுப்பாடும் ஏற்பட்டு வருகிறது.இவற்றைத் தீர்க்கக் கூடிய வழிமுறைகளைக் காட்சிப்படுத்தியிருக்கும் இக்கண்காட்சியில் விவசாயப் பொது அறிவுப் போட்டிக்கான வினாத்தாள்களும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பூங்காவனத் திருவிழாவன்று இரவு விவசாயப் பொதுஅறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் வழங்கப்படவுள்ளதாக கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தினமும் மாலை 3 மணி தொடக்கம் இரவு 9மணிவரை நடைபெற இருக்கும் இக்கண்காட்சி சப்பறம், தேர், தீர்த்தம், பூங்காவனம் ஆகிய விசேட திருவிழாக்களின்போது காலை 8 மணியிலிருந்து இரவு 9மணி வரை நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (6)

# இராணுவ டிரக்-பேருந்து விபத்து

## புலமைப் பரிசில் பரீட்சைக்கு சென்ற மாணவர்கள் அடங்கலாக 28 பேர் படுகாயம்



தம்புள்ளை - ஹபரன பிரதான வீதியின் இனமலுவ எனும் பிரதேசத்தில் தனியார் பேருந்து ஒன்றுடன் இராணுவ டிரக் வண்டி ஒன்று நேருக்கு நேர் மோதியதில் இராணுவத்தினர் மூவர் உட்பட 28 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 7 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.காயமடைந்தவர்களில் நேற்று தரம் 5 புலமைபரிசில் பரீட்சை எழுத சென்ற மாணவர்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சாரதிகளின் கவனயீனம் காரணமாகவும் வீதி வழுக்கியதன் காரணமாகவும் இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்தவர்கள் தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தம்புள்ள வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6)

# ஆட்சியாளர்களின் ஊழல் அதிகரிப்பு நாட்டில் மழையின்மைக்கு காரணம்

## ஐ.தே.க. இப்படிக் குற்றஞ்சாட்டுகிறது

(கொழும்பு)

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. மக்களிடமிருந்து அறவீடு செய்யப்படும் மில்லியன் கணக்கான வரிப்பணம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் களியாட்டங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றது என அக்கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளினால் நாட்டில் கடும் வரட்சி நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

நாட்டின் தந்தை என தன்னை அடையாளப்படுத்திக் கொளளும் ஜனாதிபதி, தனது பிள்ளைகளின் நெருக்கடி நிலைமைக்கு என்ன செய்தார் என ஐக்கிய தேசியக் கட்சி ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் கேள்வி எழுப்பி யுள்ளது.

ஆட்சியாளர்களின் களியாட்டங்களுக்காக ஒட்டுமொத்த மக்களே சுமைகளை சுமக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. மக்களை நேசிக்கும் ஆட்சியாளர்கள் நாட்டை ஆட்சி செய்தால் இவ்வாறான வரட்சியோ அல்லது சிக்கல்களோ ஏற்படாது என சுட்டிக்காட்டியுள்ளது. (6)

# இன்றைய இராசி பலன்

**18.08.2014**

**(ஆவணி 02, திங்கட்கிழமை)**

**சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு**
**அட்டமி முற்பகல் 11.26 மணிவரை**
**கார்த்திகை பிற்பகல் 5.26 மணிவரை**
**இராகுகாலம் 7.35-9.05 மணிவரை**
**சுபநேரம் 12.05-1.35 மணிவரை**
**கிருஷ்ணஜெயந்தி, அட்டமி- நவமி**

வளவன்

**மீனம்**
பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம்.

**மேடம்**
விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், யோகமான நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**இடபம்**
விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், உடல் நலம் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை, போசன சுகமுண்டு.

**மிதுனம்**
அன்புநண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பிதா சிந்தையுண்டு.

**கும்பம்**
வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், நீங்கள் தேடிச்சென்று சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு.

**கடகம்**
மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதில் செய்து முடிப்பீர்கள், உறவினர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்திதரும்.

**மகரம்**
செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், போட்டியாக செயற்பட்ட சிலர் மனம் மாறுவர், பிள்ளையின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்**
கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், அந்நியர்களின் உதவிகள், ஒத்தாசைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**தனுசு**
கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், உடல் நலம் சீராகும், புகழ் மிக்கவர்களின் மதிப்பு கிட்டும், வியாபார விரோதம் விலகும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரும்.

**விருச்சிகம்**
வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்**
சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கவலைகள் தீர கணபதியை வழிபடவேண்டிய நாள், அலைச்சல்கள் அதிகரிக்கும், மறதியால் ஒரு சில பணிகளை தவறவிடுவீர்கள்.

**கன்னி**
மறைமுக எதிர்ப்புகள் மாறும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, திடீர் பயணங்களால் நன்மையுண்டு, அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொமர்ஷல் வங்கியின் வரிக்கு முன் இலாபம் ரூ. 6 பில்.



தலைவர் தர்மா தீரசிங்க — முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெகன்துரைரட்ணம்

நடப்பு நிதியாண்டில் முதலரையாண்டில் கொமர்ஷல் வங்கி வரிக்கு முந்திய இலாபமாக 6.474 பில்லியன் ரூபாவை பதிவு செய்துள்ளது. வரிக்குப் பிந்திய இலாபமாக 4.479 பில்லியன் ரூபா பதிவா கியுள்ளது.

2014 ஜூன் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த முதல் ஆறு மாத காலப் பகுதியில் மொத்த தொழிற்படு இலாபமாக 17,698 பில்லியன் ரூபாவை பதிவு செய்திருந்தது.

இந்த அதிகரிப்பில் அதிகளவு மீளப்பெறுகைகள், உயர்ந்தளவு வியாபாரங்கள் போன்றன பங்களிப்பை வழங்கியிருந்தன.

# அரசாங்கத்தின் தலையீடு வங்கிகளின் செயற்பாட்டை சீரழிக்கும்

## - எச்.எஸ்.பி.சி வங்கித் தலைவர்



தனியார் வங்கிகளின் நிர்வாக செயற்பாடுகளில் அரசாங்கத்தின் தலையீடு என்பது குறித்த வங்கிகளின் செயற்பாடுகளை சீரழிக்கும் வகையில் அமையுமென இந்தியாவின் எச்எஸ்பிசி வங்கியின் தலைமை அதிகாரி நைலா லால் கித்வானி தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஹற்றன் நஷனல் வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி ஆகியவற்றின் நிர்வாக செயற்குழுவின் அரச தரப்பில் உயர்ந்த பதவிகளைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்ததை தொடர்ந்து இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் இடம்பெற்ற செயலமர்வில் கித்வானி கலந்து கொண்டு சொற்பொழிவொன்றை மேற்கொள்கையில் மேற்படி கருத்தை தெரிவித்திருந்தார்.


கொமர்ஷல் வங்கியின் எட்டு பணிப்பாளர்களில் ஐந்து பேர் அரசாங்கத்துடன் நேரடியான தொடர்பை கொண்டவர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டிரையம்ப் நிறுவனத்திற்கு விருதுகள்

டிரையம்ப் இன்டர்நஷனல் சிறிலங்கா நிறுவனம், அண்மையில் இடம்பெற்ற NASCO 2014 விருதுகள் வழங்கும் நிகழ்வில் விற்பனை செயற்திறனுக்கான விருதுகளை வென்றெடுத்தது. கடந்த ஜூலை 25-ம் திகதி வோட்டர்ஸ் ஏட்ஜ் ஹோட்டலில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தொடர்ந்து 5 ஆவது ஆண்டாக டிரையம்ப் விருதுகளை வென்றது. வர்த்தகம் மற்றும் விற்பனை என அனைத்து அம்சங்களிலும் செயற்திறனை உறுதிசெய்யும் இலங்கையின் முன்னணி பெண்களுக்கான உள்ளாடைகள் வர்த்தகநாமமாக டிரையம்ப் விளங்குகிறது.

இலங்கையிலுள்ள விற்பனை படையினரை கௌரவித்து, வெகுமதிகளை வழங்கும்ஒரேயொரு தேசிய நிகழ்ச்சியாக NASCO விருதுகள் வழங்கும் விழா திகழ்கிறது. இந் நிகழ்வினை ஒழுங்கு செய்யும் இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் (SLIM) ஆனது, இந்தாண்டு மாநாட்டினை 14வது ஆண்டாக முன்னெடுத்திருந்தது.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் பேஷன் சில்லறை பிரிவு, போட்டித் தன்மையை பரீசிலித்து குறிப்பிடத்தக்க சாதனை மற்றும் பன்முக தொழிற்துறைகளிலிருந்து போட்டியாளர்களின் தெரிவு ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் 4 விருதுகளை டிரையம்ப் வென்றெடுத்தது. பிரதேச முகாமையாளர் பிரிவில் தங்க விருதினை அசங்க உபேந்திரா வென்றார். மேலும் நிர்வாகப் பிரிவில் வெண்கல விருதினை லக்மால் பிரதீப் குமாரவும், front line பிரிவில் வெள்ளி விருதினை நிலங்க தில்ஷானும், வெண்கல விருதினை சலிந்த பிரபாத் ராஜபக்ஷவும் வென்றெடுத்தனர்.




டிரையம்ப் சிறிலங்கா நிறுவனத்தின் விற்பனை தலைவர் சன்ஜீவ கருத்து தெரிவிக்கையில்,

NASCO 2014 நிகழ்வில் பங்குபற்றிய டிரையம்ப் குழுவில் தனித்துவம் மிக்க சிறப்பாக செயலாற்றுபவர்கள் உள்ளனர். இந்த குழுவினரின்சாதனையானது, டிரையம்ப் நிறுவனத்தின் விற்பனை செயற்திறனுக்கான உறுதிப்பாட்டினை பிரதிபலிப்பதுடன், எதிர் காலத்தில் வெற்றியாளர்களாகக் கூடிய ஆற்றல் மிக்க தனிநபர்கள் பலர் எம்மோடு இணைந்துள்ளனர். டிரையம்ப் நிர்வாகத்தினர் சார்பாக இந்த வெற்றியாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

டிரையம்ப் இன்டர்நெஷனல் சிறிலங்கா நிறுவனத்தின் செயற்பாட்டு தலைவர் அமல் பெர்ணாண்டோ கருத்து தெரிவிக்கையில்,

"எமது வியாபாரத்தின் மையப் புள்ளி எமது விற்பனை படையினர் ஆகும். NASCO 2014 இல் எமது குழுவினரின் பங்குபற்றுதலானது செயற்திறனை சான்று பகிர்வதுடன, எமது சாதனைகள் குறித்து நாம் மிகவும் பெருமையடைகின்றோம். யேளுஊழு விருதுகள் வழங்கும் நிகழ்வில் தொடர்ந்து 5 ஆண்டுகள் டிரையம்ப் விருதுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது"என்றார்.

# மனிதவள செயலமர்வில் SLIIT பட்டதாரிகள் கௌரவிப்பு

துறைசார் தேவைகளை பூர்த்தி செய்ய மாணவர்களை வழிகாட்டுவது மற்றும் தொழில் நிலையத்தில தமது செயற்பாடுகளை திறம்பட மேற்கொள்ள ஊக்குவிப்பது போன்ற செயற்பாடுகளை SLIIT தாபிக்கப்பட்டது முதல் முன்னெடுத்து வருகிறது. நாட்டின் முன்னணி பட்டப் படிப்புகளை வழங்கும் கல்வியகமாக SLIIT திகழ்வதுடன் கல்வி மற்றும் தொழில்சார் வாய்ப்புகளை மாணவர்களுக்கு கணனி, வணிகம் மற்றும் பொறியியல் ஆகிய துறைகளில் வழங்கி வருகிறது.

SLIIT, சிறிலங்கா ரெலிகொம், LOLC, IFS, Aeturnum Lanka (Pvt) Ltd, Unilever, hSenid Business Solutions, Innodata Isogen, Mobitel, SLASS COM, Zone 24x7, Virtusa, David Pieris Motor Company, Prima Ceylon, Reservations Gateway (Pvt.) Ltd மற்றும் ஒரேன்ஜ் தகவல் தொழில்நுட்பம் ஆகியன இணைந்து வெவ்வேறு துறைகளில் இயங்கும் SLIIT பட்டதாரிகளின் செயற்பாடுகளை கண்டறியும் வருடாந்த மனிதவள செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தன.

மாணவர்களின் வினைத்திறன் மற்றும் தொழில்தர்மம் பற்றி IFS R&D நிறுவனத்தின் மனிதவள மற்றும் செயற்பாடுகள் அபிவிருத்தி பணிப்பாளர்புதுலியனகே கருத்துத் தெரிவிக்கையில்,

"எம்மிடம் 100க்கும் அதிகமான SLIIT பட்ட தாரிகள் பணியாற்றி வருகின்றனர். SLIIT உடன் இணைந்து நாம விசேட புலமைப் பரிசில் திட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். பகுதி நேரம் பட்டப் படிப்பையும், பகுதி நேரம் கற்கைகளையும் தொடர்வதற்கான வசதிகளை நாம் ஏற்படுத்தியுள்ளோம். SLIIT மாணவர்கள் விரைவாக விடயங்களைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவர்களாக இருப்பதை அவதானிக்க முடிகிறது" ளஎன்றார்.

# சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்த மென்பொருள்

சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் விதமாக தமது வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக இணையத்தளம் ஊடாக மேற் கொள்வதற்கும் அதற்குத் தேவையான இணையத் தளங்களை இலகுவாக நிர்மாணித்துக கொள்வதற்கும் பிஸ்ஸ்மாரட் (BizSmart) என்ற பெயரில் புதிய மென்பொருள ஒன்றை Global Lifestyle Lanka நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கையில் முன்னணி இணையத்தள மேம்பாட்டு நிறுவனமான V2K Network இன் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த மென்பொருளின் செயற்பாடானது,வர்த்தக மற்றும் கூட்டுத்தாபன கொடுக்கல் வாங்கல்களுக்காக சிறந்து விளங்குவதோடு பல்வேறு தீர்வுகளுக்காகவுமே அறிமுகப்படுத்தப்பட்டதொன்றாகும்

## வர்த்தக உலகம்

### ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# ஆசிரி ஹொஸ்பிட்டல் காணி விற்க முடிவு

கொழும்பு 7 ஹோர்டன் பிளேஸில் அமைந்துள்ள 293 பேர்ச் (29 பரப்பு) காணியை விற்பனை செய்ய ஆசிரி ஹொஸ்பிட்டல்ஸ் முன்வந்துள்ளது. இதற்கான அனுமதியை தனது பங்குதாரர்களிடமிருந்து பெற்றுள்ள குறித்த நிறுவனம், விற்பனைக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டுள்ளது.

2.6 பில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ள இந்த காணியின், ஒரு பேர்ச் விலை 9 மில்லியன் ரூபாவாக அமைந்துள்ளது. 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டம் 185க்கு அமைய இடம்பெறவுள்ள மாபெரும் கொடுக்கல் வாங்கலாக இது அமைந்துள்ளது.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,918.23 | 6,943.85 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,801.87 | 3,820.98 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 9,129.205 |

உயர்வடைந்த பங்குகள்(ரூ.): லங்கா சென்சரி(W)(1.50), உடப்புசலாவ(33.80), பெஸ்ட் கப்பிரல்(34.40), டுனாமிஸ் கப்பிரல்(22.10), என்ரஸ்ட்செக்.(39.10).

வீழ்ச்சியடைந்த பங்குகள்(ரூ): பிசிபார்மா(1.90), பாம் கார்டன் ஹோட்டல்(99.70), சுவர்ண மஹால் பினான்ஸ்(2.50),திறி ஏக்கர் பாம்ஸ்(52.00),செரண்டிப் ஹோட்டல்(21.30).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# பேஸ்புக் துணைத் தலைவர் இராஜினாமா

facebook

சமூக வலைதளமான பேஸ்புக் நிறுவனத்தின் துணைத் தலைவர் (வெளியீடு நிர்வாகம்) பதவியில் இருந்து தாம் விலகுவதாக சாமுவேல லெசின் தெரிவித்துள்ளார். வரும் 29-ம் தேதி முதல் ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ள லெசின், தம்மிடம் ஏராளமான யோசனைகள் இருக்கிறது. ஆனால் அவற்றையெல்லாம் உடனடியாகசெயல்படுத்த போவதில்லை என்றும் தமது மனைவி ஜெசிகா மேற்கொண்டு வரும் வெளியீடுகளுக்கு தாம் உதவியாக இருக்கப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.73 | 131.60 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 214.07 | 220.20 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 171.02 | 176.64 |
| சுவிஸ் பிராங் | 140.99 | 146.15 |
| கனேடிய டொலர் | 117.43 | 121.41 |
| அவுஸ்திரேலிய டொலர் | 119.05 | 123.55 |
| சிங்கப்பூர் டொலர் | 102.81 | 106.18 |
| ஜப்பான் யென் | 1.25 | 1.29 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.14 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.43 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய தொழில் உதவிக் கொடுப்பனவுகளும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவிகளும்

வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம் கரவெட்டி பிரதேச செயலக பிரிவை சேர்ந்த பயனாளிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா பெறுமதியான சுயதொழில் நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதற்கமைய பயனாளிகளான கரவெட்டி வடக்கைச் சேர்ந்த கந்தன்- செல்வராசா (கோழி வளர்ப்புக்கு), கரவெட்டி மேற்கு இராஜ கிராமத்தைச் சேர்ந்த செல்வரத்தினம்-சந்திரா (வியாபாரத்திற்கு), அல்வாய் கிழக்கைச் சேர்ந்த பூரணம்பிள்ளை கலையரசி (தையலுக்கு) சமரபாகுவினைச் சேர்ந்த முத்து சின்னராசா (மாடு வளர்ப்புக்கு) என குறித்த பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் வீரகத்தி பிள்ளையார் கோவிலடி இமையாணன் மேற்கைச் சேர்ந்த சிவஞானம் அன்னம்மா என்பவருக்கு சக்கர நாற்காலி ஒன்றை இலசவமாக வழங்கியுள்ளது.

எனவே மேற்குறித்த பயனாளிகள் கரவெட்டி பிரதேச செயலக பிரிவின் சமூக சேவைப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவசிறி தெரிவித்தார்.

மேலும் முச்சக்கரவண்டி, மூக்கு கண்ணாடி, செயற்கை அவயவங்கள் பொருத்துதல், செவிப்புலனற்றோருக்கான கருவி, ஊன்றுகோல் மற்றும் சக்கர நாற்காலி என்பன தேவைப்படுவோர் என பலரும் தத்தமது மருத்துவ அதிகாரியின் சிபார்சு கடிதத்துடன் சமூக சேவைப் பிரிவில் தொடர்பு கொள்ள முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (6-60)



நன்றி-ஜலன்ட்

# வரட்சி நிவாரணம் குறித்து ஆராய வடக்கு மாகாணசபை கூடுகிறது

யாழ். தீவுப்பகுதியில் நிலவும் கடும் வரட்சி காரணமாக குடிநீர் இன்றி வாடும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து எதிர் வரும் 21 ஆம் திகதி வட மாகாண சபை கூடி தீவிரமாக ஆராயவுள்ளதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டிலும் தீவுப்பகுதிகளிலும் வரலாறு காணாத வரட்சி நிலவுவதால் மக்கள் குடிநீர் இன்றி பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இம்மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு கூட வடக்கு மாகாண சபையிடம் போதிய நிதி வசதியில்லை. இத்தகைய நிலையில் இம்மக்களுக்கு குடிநீர் பெற்றுக் கொடுக்கும் வழிகளை ஆராயவே வடக்கு மாகாண சபை கூட்டப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (6)

# அன்பே சிவம் அமைப்பினரால் குடிநீர் விநியோகிக்க நிதியுதவி

வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் அன்பே சிவம் அமைப்பு வடக்கின் குடிநீர் விநியோகத்துக்கென நேற்று முன்தினம் சனிக்கிழமை மூன்று இலட்சம் ரூபாவைக் கையளித்துள்ளது.

வடக்கு மாகாணம் கடும் வரட்சியை எதிர்கொண்டுள்ள நிலையில் பல பிரதேசங்களில் குடிநீருக்குப் பாரிய பற்றாக்குறைவு ஏற்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் நிதி உதவியுடன் உள்ளூராட்சி மன்றங்கள் நீர் வழங்கும் சேவையை மேற்கொண்டாலும் நிதி பற்றாக்குறைவாலும் போதிய வாகனங்கள் இல்லாமையாலும் நீர் வழங்கலை முழுமையாக முன்னெடுக்க முடியவில்லை. இதனால், வடக்கு மாகாண விவசாய அமைச்சு கடும் நீர் நெருக்கடி நிலவும் பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்றங்களின் அனுசரணையுடன் குடிநீரை விநியோகித்து வருகிறது.

நீர் வழங்கும் சேவையை விரிவுபடுத்துவதில் பொருளாதார ரீதியாக இருக்கும் நெருக்கடியை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அண்மையில் சுட்டிக்காட்டியதனை அடுத்தே சூரிச்சிவன் கோவிலின் சைவத்தமிழ்ச் சங்கத்தின் உபபிரிவான அன்பே சிவம் அவசர உதவியாக மூன்று இலட்சம் ரூபாவை அவரிடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. அன்பே சிவத்தின் யாழ்.மாவட்ட கிளையின் தலைவர் அ.அருளானந்தசோதி இத்தொகையைக் கையளித்துள்ளார்.

அன்பே சிவம் அமைப்பு வடக்கு கிழக்கில் பல்வேறு வகையான சமூக வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (6)

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடமராட்சியில் மின் விநியோகம்

(கும்பளை)

வடக்கின் வசந்த மின் விநியோகத் திட்டத்தின் கீழ் கிழக்கில் இன்று திங்கட்கிழமை மூன்று கிராமங்களுக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் மின் விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைய பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சிப் பகுதி கேவில் கிராமத்தில் பிற்பகல் 4 மணிக்கு செம்பியன் பற்று கிராமத்திலுள்ள மானிய வழக்கத்துறையிலும், பிற்பகல் 5.30 மணிக்கு நாகர் கோவில் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் நடைபெறவுள்ளது.




இந்நிகழ்விற்கு வடக்கின் வசந்த திட்ட பொறியியலாளரும் முகாமையாளருமான எஸ்.குணசீலன், யாழ். மாவட்ட மின் அத்தியட்சகர் எஸ்.ஞானகணேசன், பருத்தித்துறை மின் அத்தியட்சகர் எஸ்.இராஜேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர் ஐ.சிறிரங்கேஸ்வரன் ஆகியோர்ள்ளர்.

வடமராட்சிக் கிழக்கு குடாப்பரப்பு தவிர்ந்த ஏனைய கிராமங்களுக்கு இத்துடன் மின் விநியோகத்திட்டம் பூரணப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-19)





தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நாடளாவிய ரீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த 12 வலயங்களிலிருந்து 18 ஆயிரத்து 967 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். மாணவ மாணவிகள் பரீட்சை முடித்து ஆர்வத்துடன் வெளியேறுவதை படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# வடமராட்சியில் அதிகரிக்கும் கால்வாய் நோய்த்தாக்கம்

## கால்நடை வைத்திய அதிகாரி தகவல்

வடமராட்சி பகுதிகளில் கால்வாய் நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது என கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி திருமதி சகுந்தலா மகேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

இந்த நோய்த் தாக்கம் குறிப்பாக கப்பூது, குடவத்தை, துன்னாலை கிழக்கு பகுதிகளில் ஏற்பட்டுள்ளது என வைத்திய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கால்வாய் நோய்த் தாக்கம் தடுப்பதற்கான தடுப்பு ஊசி ஏற்றப்படும் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன எனவும் இத்தடுப்பூசி ஏற்றப்படுவதற்கு மேற்குறித்த பகுதிகளில் உள்ள பண்ணையாளர்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-60)

# ஆசிரியையின் சடலம் எரிந்த நிலையில் மீட்பு

(கரணவாய்)

யாழ், புலோலி, முதலாம் கட்டைப் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து எரிந்த நிலையில் ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மீட்கப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேயிடத்தைச் சேர்ந்த தருமராசா இராசலக்ஷ்மி (வயது 63) என்ற ஆசிரியையே சடலமாக மீட்கப்பட்டார்.

வீட்டில் தனித்து வசித்து வந்த மேற்படி முன்னால் ஆசிரியை, நேற்று வீட்டை விட்டு வெளியில் வராததையடுத்து, சந்தேகம் கொண்ட அயலவர்கள் பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் கொடுத்தனர். பொலிஸார் ஆசிரியையின் வீட்டிற்குச் சென்று பார்த்த போது, ஆசிரியை எரிந்த நிலையில் சடலமாகக் மீட்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, வடமராட்சிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி அன்ரலா வின்சன் தாயனின் உத்தரவிற்கமைய சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6-60)

# சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



யாழ். சுன்னாகத்தை வதிவிடமாக கொண்டலயன் அருளப்பு வில்லியம் ஜேசுதாசன் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் யாழ்.மாவடட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிபதி எஸ். சதீஸ்தரன் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இலங்கைவங்கி ஓய்வுநிலை வங்கியாளரும் தற்போது வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (6)

★ ★ ★ ★ ★ ★



யாழ்.சுழிபுரம் தெற்கை சேர்ந்த இராசதுரை சிறீதரன் அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி எஸ்.சதீஸ்தரன் முன்னிலையில் யாழ்ப்பாணம் நீதி நிர்வாக வலயத்துக்கான சமாதான நீதவானாகி சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் யாழ்.மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# பணம், நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், பிரம்படிப் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை உள்நுழைந்து 6 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான காசு, நகைகள் திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு ஜன்னல் கம்பிகளை வளைத்து உள்நுழைந்து, அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 10 பவுண் நகைகள் மற்றும் 2 இலட்சம் ரூபாய் பணம் என்பனவே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வீட்டு உரிமையாளர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாகவும் இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தடை விதிக்கப்படலாமென ஐரோப்பிய நிறுவனங்கள் ஊகம் வெளியீடு

இலங்கை அரசாங்கத்தின் மீது தொடர்ந்து அழுத்தங்களைப் பிரயோகித்து வரும் ஐரோப்பிய நாடுகள் தற்போது பொருளாதாரத் தடை விதிக்க திட்டமிட்டு வருவதாக தெரியவருகின்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படக் கூடுமென ஐரோப்பிய நிறுவனங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

இலங்கையுடனான உடன்படிக்கைகளின் போது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படல் என்ற நிபந்தனையும் உள்ளடக்கப்பட்டு உடன்படிக்கைகள் தயாரிக்கப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய நிறுவனங்களின் இந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஐரோப்பிய ஏற்றுமதி கடன் முகவர் நிறுவனங்கள் இவ்வாறு புதிய நிபந்தனைச் சரத்துக்களை உடன்படிக்கைகளில் உள்ளடக்கியுள்ளன.

ஏதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டால் அப்போது சில ஏற்பாடுகள் செய்யப்படும் என உடன்படிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

சர்வதேச ரீதியில் இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படக்கூடும் என்ற கருது கோளின் அடிப்படையில் இந்த நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையானது இலங்கைக்கு பல்வேறு வழிகளில் பாதகத்தை ஏற்படுத்தக் கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இலங்கைக்கு கடன் வழங்கும் நிறுவனங்கள் வட்டி வீதத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிதி அபிவிருத்தித் திட்டங்கள்தொடர்பிலான பல்வேறு புதிய உடன்படிக்கைகளில் இந்த நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிபந்தனைகளுக்கு அரசாங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# அலங்கார திருவிழா

கரணவாய் தெற்கு கருப்பையடி ஸ்ரீ மனோன்மணி அம்மன் அலங்காரத் திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதற்கமைய 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மணவாளக் கோல விழாவுடன் நிறைவு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-60)

# பொலிஸ் நிலையத்துக்குள் ஆபாசப்படம் பார்த்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

பொலிஸ்அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்காக பொலிஸ் நிலையமொன்றுக்குச்சென்ற வாலிபரொருவர் அங்கு தனது கையடக்கத் தொலைபேசியில் தரவேற்றம் செய்யப்பட்டிருந்த ஆபாசப் புகைப்படங்களை பார்த்துக் கொண்டிருந்ததையடுத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் தனது நண்பரொருவருக்காக பொலிஸ் அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்காக எல்ல பொலிஸ் நிலையத்திற்கு வந்த 17 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பொலிஸ்நிலையத்திற்கு வந்ததிலிருந்து கையடக்கத் தொலைபேசியூடாக எதனையோ ஆர்வமாக பார்த்து கொண்டிருப்பதை நீண்டநேரமாக அங்கு கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தரொருவர் கண்காணித்துள்ளார்.

அதனையடுத்து அவரது கையடக்கத் தொலைபேசியை சோதனை செய்தபோது அவர் ஆபாசப் புகைப் படங்களை பார்த்துக் கொண்டிருப்பது தெரியவந்துள்ளது.

அதேவேளை அந்த நவீனரக கையடக்கத்தொலைபேசியிலிருந்த 100 ஆபாச வீடியோக்களும் சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து அவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (6)

# சதுர் கடலய சமர்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

மெண்டலின் சிவகுமாரின் லலிதஷேத்ரா வழங்கும் பிரபல கடம் வித்துவான் ரி.எச்.விக்கு விநாயகத்தின் சதுர் கடலய சமர்ப்பணம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 200 |
| தக்காளி | 60 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 60 | 100 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 40-70 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 80 | 100 |
| பயற்றங்காய் | 60 | 120 | 80 |
| லீக்ஸ் | 70 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 20 | 40 | 80 |
| போஞ்சி | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 109


டொறின் மன்மதநாயகம்





கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்




கிரி சிவராஜா




விஷ்வா ஸ்ரீ



கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்




ஜனுஷன் ஜெயபாலசிங்கம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுவான தீர்வுத் திட்டத்தை தயாரித்து சிறுபான்மையினர் முன்வைப்பது அவசியம்

## முஸ்லிம் அமைச்சர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டிலுள்ள சிறுபான்மையினத்தவர்கள் தமக்குள் பிளவுபட்டிருப்பது ஆட்சியாளர்களுக்கு சாதகமாக அமைந்து விடுகின்றது.

பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கும் சிங்கள பௌத்தர்களுடன் பேரம் பேசமுடியாத நிலையில் சிறுபான்மையினத்தவர்கள் உள்ளனர். இந்நிலை மாற்றப்பட்டு சிறுபான்மையினத்தவர்களான தமிழர்கள், முஸ்லிம்களும் மலையகத் தமிழர்களும் ஒன்றிணைந்து செயற்படுவது காலத்தின் கட்டாயமாகவுள்ளது. அதேவேளை சிங்கள ஆட்சியாளர்களிடம் சிறுபான்மையினத்தவர்கள் தனித்தனியே தீர்வுத் திட்டங்களை முன்வைப்பதை விடுத்து பொதுவான ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டுமென உற்பத்தித்திறன் அபிவிருத்தி அமைச்சர் பஸீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

'தமிழ் பேசும் மக்களாகிய வடக்கு, கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய முத்தரப்பினரும் அரசியல் ரீதியாகக் கட்டாயமாக ஒன்றுபட்டு செயற்படவேண்டிய காலம் வந்துவிட்டது.

இந்த ஐக்கியத்துக்கான முன்னெடுப்புக்களை முஸ்லிம் தலைமைகளே மேற்கொள்ள வேண்டும்"

தனித்தனியே தனித்துவம் பேசி, தேசியம் உரைத்து, உரிமைக்குரல் எழுப்பி, சிறுபான்மை இனங்களான நாம் நலிவடைந்து விட்டோம்.

மதவாதம் அரசியலுக்குள் நேரடியாக ஊடுருவி நிலைமையை மேலும் மோசமுற வைத்துவிட்டது. இன ரீதியாக ஒன்றுபட்டு குரல் எழுப்பப் போகின்றோமோ அல்லது மத ரீதியாகப் பிளவுபட்டு முரண்படப் போகின்றோமா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டிய வேளையும் - வேலையும் - வந்துவிட்டது.

சிறுபான்மையினத்தவர்களான நாங்கள் முத்தரப்பினருமே இன்று தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் ஓர் அடிப்படையைக் கொண்டவர்கள்.

பாதிக்கப்பட்ட - பாதிக்கப்பட்டு வருகின்ற -மிக மோசமான நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டிய ஆபத்தில் சிக்கியுள்ள - தரப்பினர்கள் என்ற முறையிலும் நமக்கு மத்தியில் ஒரு பொது நிலைமை உள்ளது.

இதனைப் புரிந்து கொண்டு விரைந்து நாம் காரியமாற்ற வேண்டும். எமக்குள் ஐக்கியப்பட்டு செயற்பட்டால் மட்டும் எங்கள் தனித்துவத்தையும், வரலாற்று அடையாளங்களையும், பாரம்பரிய விழுமியங்களையும் - ஏன் நம் இனங்களின் இருப்பையே - நாம் தக்க வைக்க முடியும் என்றாகி உள்ளது.

எமக்குள் ஐக்கியப்படுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று - இப்போது முத்தரப்பினராகிய இலங்கைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூன்று தமிழ்ப் பேசும் குழுமங்களையும் தலைமை வகித்து வழி நடத்தும் தலைமைகள் அதனைச் செய்யலாம். அல்லது - மற்றது - அப்படி ஐக்கியப்பட்டு செயலாற்றக்கூடிய புதிய தலைமைகள் இந்த மூன்று இனக் குழு மங்களிடையே இருந்தும் புதிதாகத் தோன்றி அத்தகைய ஒற்றுமையை ஏற்படுத்தலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (6)


## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் ஆட்சேர்ப்பு அறிவித்தல்



**தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் கட்டுமானப் பணிகள் தொடர்பில் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் சுயவிபரங்களைப் பூரணப்படுத்தி விண்ணப்பத்தை 28.08.2014 இற்கு முன்னர் கிடைக்கத் தக்கதாக **செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இப்பதவிக்கு தகுந்த வேதனம் வழங்கப்படும்.

(சி-8229)

செயலாளர்
அறங்காவலர் சபை,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அம்மன் கோவில்.

18.08.2014

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளிப் பகுதியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்த பெரிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0776181216 (7434)

## Angel International School
## ஏஞ்சல் சர்வதேச பாடசாலை

School Re-Opening On 2nd September-2014

புதிய தவணை ஆரம்பம் 02.09.2014

New Admissions are available from 25th August 2014

புதிய அனுமதிகள் 25.08.2014 தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்படும்

*Angel International School is the first and the largest International School in the Jaffna Peninsula with 1000+Students.*










**Contact information**

Director:Rev Sam Rajasuriar -0777238300

Principal:Dr.Noel A.Vimalendren.J.P 0772210173

e-mail:angelism2006@gmail.com

Website:aismanipay.info

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: 5 ¼ சூரி செவ் 10 இல்<br>உயரம்: 172 cm<br>தகைமை/தொழில்: A/L, HND Engineering, IESL / உதவி பொறியியலாளர்<br>தொ.இ: B/1715 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 29 ¼ செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: A/L / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G/2561 |
| பிறப்பு: 1966 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 16 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BBA / Supply Officer (NGO)<br>தொ.இ: B/1719 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா: 52<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MSc Software Engineering / Programmer (UK – Citizen)<br>தொ.இ: G/2563 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 16 ¾ செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L / இத்தாலி சிற்ரிசன்<br>தொ.இ: B/1720 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 54 ¼ செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2567 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 32<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L / அவுஸ்ரேலியா சிற்ரிசன்<br>தொ.இ: B/1721 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 29 ½ செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2569 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

896


நண்பனே! உன் மனத்தில் இருப்பதைச் சொல் என்றது பிங்களகன்.

அரசே! தண்ணீர் பருக வந்த தாங்கள் தயங்கியபடி இங்கேயே நின்று என்ன? என்றது தமனகன்.

நண்பனே! இந்தக் காட்டிலிருந்து போய்விட நான் விரும்புகிறேன் என்றது பிங்களகன்.

...ளம் அணையையும், பிதற்றல்கள் ரகசியத்தையும், பகைமை நட்பையும், வெறும் வார்த்தைகள் கோழைகளின் உணர்வையும் அழித்துவிடுகின்றன என்றமாக இருக்கும் பொழுதும் தைரியத்தைக் கைவிடாத அரசன் அவமானம் அடைவதில்லை என்றுகூறி வைத்திருப்பது சரியான கருத்து.

# ஆப்பைப் பிடுங்கிய குரங்கு!



விட்டீர்களே, ஏன்? என்று கேட்டது தமனகன்.

பிங்களகன் முகத்தில் இதைக் கேட்டதும் மாறுதல் உண்டாயிற்று. இருந்தாலும் அதை மறைத்துக் கொண்டு அப்படி ஒன்றும் இல்லையே என்றது.

அரசே! சொல்லத் தகாததாக இருக்குமானால் அதைச் சொல்ல வேண்டாம்.

சிலவற்றை மனைவியிடம் கூறலாம்.

சிலவற்றை நண்பர்களிடம் சொல்லலாம்.

சிலவற்றை புத்திரனிடம் தெரிவிக்கலாம்.

எல்லோரும் நம்பிக்கையானவர்களே; ஆனாலும் எல்லாவற்றையும் எல்லோரிடமும் சொல்லக் கூடாது என்றது தமனகன்.

இதைக்கேட்ட பிங்களகனுக்கு தமனகனிடம் நம்பிக்கை உண்டாயிற்று. இவன் யோக்கியனாகக் காணப்படுகிறான்.

இவனிடம், நம் மனத்தில் உள்ளதைக் கூறுவதால் தவறு ஒன்றும் இல்லை என அது எண்ணியது.

நம்பிக்கையான நண்பனிடமும் நல்ல குணமுள்ள வேலையாளிடமும் அன்புள்ள மனைவியிடமும் வலிமையுள்ள முதலாளியிடமும் எதையும் கூறலாம்.

அதனால் துன்பம் குறையும் என்று கருதியது.

தமனகனே! வெகு தூரத்திலிருந்து வரும் ஒர சத்தம் உனக்குக் கேட்கிறதா என்று கேட்டது.

ஆம் அரசே! கேட்கிறது. அதனால் ஏன்? என்று வினவியது தமனகன்.

ஏனென்றால் நம்முடைய காட்டிற்குள் அபூர்வமான மிருகம் ஒன்று நுழைந்திருக்கிறது.

நாம் கேட்பது அதனுடைய சத்தத்தைத்தான்.

அந்தச் சத்தத்துக் கேற்ற குணத்தையும் குணத்துக்குத் தகுந்த வலிமையையும் அது பெற்றிருக்க வேண்டும் என்று கூறியது பிங்களகன்.

சத்தத்தை மட்டும் கேட்டுவிட்டு ஏன் நீங்கள் பயப்படுகிறீர்கள். வெள்ளம் ... பழிமொழியை நீங்கள் கேட்டது இல்லையா?

ஆகவே, முன்னோர்கள் தேடி வைத்துப் பரம்பரையாக வந்து அடைந்திருக்கின்ற இந்தக் காட்டை விட்டுச் செல்வது எங்கள் எஜமானராகிய உங்களுக்கு நன்மையை அளிக்காது.

ஒரு காலை ஊன்றி மற்றொரு காலை எடுத்து வைப்பதுதான் புத்திசாலித் தனம்.

அதேபோல் புதிய வீட்டைத் தேடித் தீர்மானித்துக் கொள்ளாமல் பழைய வீட்டைக் கைவிடலாகாது.

மேலும் இங்க பலவகையான சத்தங்கள் கேட்கின்றன.

இவை வெறும் சத்தங்கள்தானே தவிர, இதில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. உதாரணமாக இடி, புல்லாங்குழல், வீணை, மணி, தம்பட்டம், மிருதங்கம், வண்டி, கதவு, இயந்திரம் முதலியவற்றின் சத்தங்கள் கூடத்தான் கேட்கின்றன. அவற்றைக் கேட்டு நாம் பயப்பட வேண்டியதில்லை.

எதிரி பயங்கரமாக இருக்கும் பொழுதும் கோப... பிரம்மாவே பயமுறுத்தினாலும் தைரியசாலி தைரியத்தைக் கைவிடுவது இல்லை.

கோடைகால வெயில் குட்டையைத் தான் வற்றச் செய்யும். சிந்து நதியோ எப்போதும் பெருகி ஓடிக் கொண்டேதான் இருக்கும்.

துன்பம் நேர்ந்தபோது துக்கப் படாமல் இருப்பவனும், நன்மை வந்த போது மகிழ்ச்சி அடைபவனும், போரில் நிலைகலங்காமல் இருப்பவனுமே உலகில் சிறந்த தலைவனாகத் திகழ்வான்.

அத்தகைய மகனைத் தாய் மிகவும் அரிதாகவே பெற்றெடுக்கிறாள்.

பலவீனத்தால் தலை வணங்குபவனும் சுயமதிப்பு இல்லாதவனும் புல்லுக்கு ஒப்பான நிலையையே அடைகிறான்.

இதையெல்லாம் மனதில் கொண்டு இன்னும் தைரியமாக இருக்க வேண்டும்.

வெறும் சத்தத்தைக் கேட்டுப் பயப்படக்கூடாது.

இது கொழுப்பும் மாமிசமும் நிறைந்திருக்கிறது என்று முதலில் நினைத்தேன்.

உள்ளே புகுந்து பார்த்தபோது வெறும் தோலும் மரக்குச்சிகளுமாக இருக்கக் கண்டேன் என்று ஒரு கதை கூறுகிறத்து என்றது தமனகன்.

அது எப்படி? என்று பிங்களகன் கேட்டது.

தமனகன் சொல்லத் தொடங்கியது.........

(தொடரும்)

## 08.2014 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1201 - லாத்வியாவின் ரீகா நகரம் அமைக்கப்பட்டது
- 1868 - பிரெஞ்சு வானியல் நிபுணர் பியேர் ஜான்சென் சூரிய கிரகணத்தை ஆராயும்போது ஹீலியம் என்ற தனிமத்தைக் கண்டுபிடித்தார்.
- 1877 - செவ்வாய்க் கோளின் ஃபோபோஸ் துணைக் கோள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1891 - மார்டீனிக் தீவில் நிகழ்ந்த பெரும் சூறாவளியினால் 700 பேர் கொல்லப்பட்டனர்.
- 1924 - பிரான்ஸ் ஜேர்மனியிலிருந்து தனது படைகளைத் திரும்ப அழைக்க ஆரம்பித்தது.
- 1928 - சென்னை மியூசிக் அகாதமி அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைக்கப்பட்டது.
- 1938 - நியூயோர்க்கையும் கனடாவின் ஒண்டாரியோவையும் இணைக்கும் ஆயிரம் தீவுகள் பாலத்தை அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெ ல்ட் திறந்துவைத்தார்.
- 1950 - பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜூலியன் லாஹூட் படுகொலை செய்யப்பட்டார்.
- 1958 - விளாடிமீர் நபகோவ் எழுதிய லொலிட்டா (Lolita) என்ற புதினம் அமெரிக்காவில் வெளியிடப்பட்டது.
- 1971 - வியட்நாம் போர்: ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியன தமது படைகளை திரும்ப அழைக்க முடிவு செய்தன.

பிறப்புகள்


- 1750 - அந்தோனியோ சாலியரி, இத்தாலிய இசையறிஞர் (இ. 1825)

இறப்புகள்

- 1227 - செங்கிஸ் கான், மங்கோலியப் பேரரசின் மன்னன்
- 1850 - ஹோனர் தெ பல்ஸாக், பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1799)
- 1945 - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், (பி. 1897)
- 2009 - கிம் டாய் ஜுங், தென்கொரியக் குடியரசுத் தலைவர் (பி. 1924)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்
## "சாதனை நாயகனின் சரித்திரம்"





...இங்கிலாந்து பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பிய சச்சினுக்கு இந்திய மண்ணில் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. ஆனால் இந்தப் பண்ணிரண்டு மாத காலத்தில் சச்சின் ஒரு டெஸ்டு போட்டிகூட இந்தியாவில் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, இந்திய ரசிகர்களால் தொலைக்காட்சிமூலம் மட்டுமே சச்சின் ஆடுவதைப் பார்க்க முடிந்தது. நேரில் அவனது ஆட்டத்தைப் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் அவர்களுக்கு நிறைய இருந்தது என்னவோ உண்மைதான்.

இந்த ஏக்கம் தீரும் வகையில் 1990 நவம்பர் மாதம் சண்டிகரில் இலங்கைக்கு எதிரான சர்வதேசப் போட்டி நடைபெற்றது. இலங்கை உலகளவில் பேசப்படும் கிரிக்கெட் நாடாக இன்னும் வளராத நிலை அப்போது.



ஆட்ட நாயகன் விருது சச்சினுக்கு வழங்கப்பட்டது. பின்னர் நடைபெற்ற கொண்டாட்டங்களில் மேல் நாட்டு வழக்கப்படி அனைவரும் குடிப்பதற்கு ஷாம்பைன் வழங்கப்பட்டது. சச்சினின் வயதோ 17தான். சச்சின் நெளிந்து கொண்டே சார் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் சட்டப்படி குடிக்க உரிமை. எனக்கு 17 வயதுதான் ஆகிறது என்றானாம்!

ஆனால், சச்சின் வெறும் 11 ரன்களே எடுத்து அனைவரையும் ஏமாற்றி விட்டான். இந்தியா இன்னிங்ஸ் வித்தியாசத்தில் இலங்கையைத் தோற்கடித்திருந்ததால் இதை யாரும் ஒரு பெரிய வெற்றியாகவே கொண்டாடவில்லை. சச்சினின் ஆட்டத்தைக் காண முடியாத சோகத்தில் இந்தியாவின் வெற்றியே முற்றிலுமாக மறைந்து போனது.

பாதுகாப்பு காரணமாக பாகிஸ்தான் தனது இந்தியப் பயணத்தை ரத்து செய்திருந்ததால் வேறு போட்டிகள் எதுவும் உடனடியாக நடைபெறவில்லை. இலங்கையுடனான ஒருநாள் போட்டிகள் மட்டுமே அட்டவணையில் இருந்தன. நாக்பூரில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் இந்தியா 19 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சச்சின் 36 ரன்கள் எடுத்திருந்தான். டிசம்பர் 5 ஆம் திகதி பூனேவில் இரண்டாவது ஒருநாள் போட்டி துவங்கியது. அதில் சச்சின் 38 பந்துகளில் 53 ரன்கள் மற்றும் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தி இந்திய அணியின் வெற்றிக்கு உதவினான். ஒருநாள் போட்டிகளில் அவனது முதல் அரை செஞ்சுரி இது. இதன் மூலம் ஆட்டநாயகனாவும் அறிவிக்கப்பட்டான். மூன்றாவது ஒருநாள் போட்டி கோவாவில் ஆரம்பமானது. அதில் இந்தியா 136 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இலங்கை வெகு எளிதாக இந்த இலக்கை எட்டி கோவா போட்டியில் வென்றது. இருப்பினும் முதல் இரண்டு போட்டிகளில் இந்தியா வென்றதால் தொடரைக் கைப்பற்றியது.

இதனை அடுத்து இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் அணிகள் பங்கு பெறும் ஆசிய கோப்பை போட்டிகள் நடைபெற்றன. பாகிஸ்தான் இதில் கலந்து கொள்ளாததால் இந்தியா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் நாடுகள் மட்டுமே பங்கேற்றன. பாகிஸ்தான் இல்லாததால் போட்டி சுவாரஸ்யம் இல்லாமல் போய்விட்டது. பலசாலியான பீமன் நிலையில் இந்தியா திகழ இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகியவை நோஞ்சான் நிலையில் இருந்தன. இவர்களுக்கு இடையே குத்துச்சண்டை நடந்தால் யார் ஜெயிப்பார்கள் என்று ஜோசியமா பார்க்க வேண்டும்? எனவே, இந்தியாவின் வெற்றி போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்பே உறுதி செய்யப்பட்டுவிட்டது. இலங்கைக்கு எதிரான கொல்கத்தா இறுதிப் போட்டியில் சச்சின் 53 ரன்கள் எடுக்க இந்தியா 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பாகிஸ்தான் இந்தியா வராததால் 1991 வரை வேறு சர்வதேச போட்டிகள் நடைபெறவில்லை. எனவே, உள்ளூர் போட்டிகளில் இந்திய வீரர்கள் விளையாடும் ஆட்டங்களைக் காணும் பேறு ரசிகர்களுக்கு கிடைத்தது. வெங்சர்கார், ரவிசாஸ்திரி, கபில்தேவ், சச்சின் ஆகியோர் தங்கள் தங்கள் மாநிலங்கள் சார்பாக ரஞ்சிக் கோப்பை, துலீப் கோப்பை, தியோதர் கோப்பை ஆகியவற்றில் விளையாடத் தயாரானார்கள். அனைத்து உள்ளூர் போட்டிகளிலும் சச்சின் கலந்துகொண்டான்.

### உருவம் கண்டு எள்ளாமை வேண்டும்!

கே. ரமேஷ்

(தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 09 இல் கூட்டென் 04 இன் பலன்கள்



### தோற்றம்

**69**

செவ்வாயில் ராகு சேர்ந்த ஆதிக்கப் பலன். உயரமாகப் பருமனாகவும் இருப்பர். குரல் வளமாக இருக்கும். கண்கள் சிவப்பாக இருக்கும். முகம் சதுரமாக ரெட்டை நாடி சரீரம் இருக்கும். முடி நிறைந்திருக்கும். கை கால்கள் தடித்து விரல்கள் பருமனாக இருக்கும். குண்டு முகமும் நடுத்தர மூக்கும் இருக்கும். உடல் முழுக்க முடி நிறைந்திருக்கும். குஸ்தி வீரர் போல இருப்பார்.

### குணம்

நல்லவரான இவர் மிகவும் இங்கிதமறிந்த ஜாலியான மாதிரி, ஈவு இரக்கமுள்ளவர். பிரதிபலன் எதிர்பாராமல் பிறருக்கு உதவி செய்வார். ஆழ்ந்த உணர்வுள்ள இவர் கருதியதைச் சாதிக்காமல் ஓய மாட்டார். உலக நடைமுறை அறிவு முழுமையாக இருக்கும். கேளாமலேயே எவர் என்று பாராமல் எல்லாருக்கும் உதவுவார். இவரிடம் சாத்திரம், சம்பிரதாயம் பேசினால் அதற்குப் பிராக்டிகலாக பதிலளிப்பார். அதில் மனிதத் தேவை நியாயப்படுத்தப்பட்ட கருத்துக்களிருக்கும். மனிதநேயம் உள்ளவராக இவரை அவை காட்டும். அனைவரையும் அவரவர் தகுதிக்கேற்ப மதிப்பார்.

ஊனமுற்றவர், அநாதைகள், ஏழைகள் என்றால் இவர்களுக்கு மிகவும் கருணை பிறக்கும். பெரியவர்களை, படித்தவரை எல்லாம் மதிப்பர். இளையவரிடம் அன்பு காட்டி அறிவுரையும் கூறுவார். அயோக்கியர்களைப் பொறுக்க மாட்டார். இவர்களிடம் சவால் விட்டால் தப்பிக்க முடியாது.

நிறையப் படிப்பர். நன்றாகப் பேசுவர். இவரிடம் தர்க்கத்தில் யாரும் ஜெயிக்க முடியாது. சீட்டாட்டம் முதலான விளையாட்டுக்களிலும், சூதிலும் இவரை வெல்ல முடியாது. அறிவு தீட்சணியம் உள்ளவர். எதையும் ஊன்றிக் கவனிப்பார். எவரையும் எதையும் சரியாக எடைபோட்டு விடுவார். யாரும் இவர்களை வெறுக்க முடியாது. ஆனால், இவருக்கு உலக வாழ்க்கையில் நோக்கம் எதுவும் இருக்காது. தொழில் திறமை அசாத்தியமாய் இருக்கும். நிறையச் சம்பாதிப்பர். ஆனாலும் சொத்துப் பத்துக்களைப் பெரிதாகச் சேர்த்துக் கொள்ள மாட்டார். நட்புக்கு அடிமைப்படுவார். இதனால் இவர் ஏமாளி என்றும் முத்திரை குத்தப்படுவார்.

கோபம், வைராக்கியம், தீவிரம் எனக் கடுமையிவர்கொண்டால் எவரும் தாக்குப் பிடிக்க மாட்டார். [illegible] பயிற்சி உள்ள[illegible] சிவப்பு பிறரைப் பயமுறுத்தும்.

ஸ்போர்ட்ஸ்காரர்போல ஓடுவது, தாண்டுவது, குதிப்பது வளைவதெல்லாம் உடல் செய்து ஒத்துழைக்கும். மனமும் சிரமங்கள் தாங்கி வலிகளைப் பொறுக்கும். இடம் காலம் பார்த்துச் சரியாகச் சிந்திக்கும். பிறர் மகிழ்ச்சியில் இவர் குறுக்கிட மாட்டார். தம் காரியங்களில் பிறர் தலையீட்டை விரும்ப மாட்டார்.

தம் நன்னடத்தையால் பிறர் குணத்தை மாற்றி அமைப்பார். பிறர் சுதந்திரத்தைப் பாதிக்காமல் பழகிடுவார். சுறுக்கென்று பேசு எவருடைய தவறையும் உணரச் செய்து திருத்துவார்.

சில தீய நண்பர் சேர்ந்து இவரைக் கெடுப்பர். இவரிடமும் சில கெட்ட பழக்கம் இருக்கும். சூதாடுவர். குடிப்பார். புகை பிடிப்பார். ஆனாலும், விடுபட நினைத்தால் விடுபடுவார். ஆனால், தம்மைத் தாமே அழித்துக் கொள்ளும் தன்மையில் செயற்படுவார். கூடியவரை இவரால் தனியாகவே இருந்து மறைய முடியும். இவர்கள் யாராலும் ஏமாற்றப்பட முடியாவிட்டாலும் தாமே தம்மை இவர்கள் கைவிட்டுவிடுவர்.

### குடும்பம்

காதல் வயப்படுவர். எதிர்பாராமல் அது போய்விடும். திருமணம் லேசில் நடக்காது. மணமானவள், விதவைப் பழக்கமும் கூட ஏற்படலாம். திருமணம் நடந்தாலும் நிலைக்காது. அல்லது நிம்மதி தராது. பொருத்த [illegible] மனைவியாக வரலாம். சிறு வயதி[illegible] வீட்டை விட்டு வெளியேறிய இவர்கள், மண வாழ்க்கையிலிருந்தும் விலகிடுவர். எதிர்பாராத திருப்பங்கள், ஆபத்துக்கள் நிறைந்ததே இவருடை வாழ்க்கை. சாகசம் புரிவார். சகோதர சகோதரிகளிடம் அன்பு வைத்திருந்தாலும் யாருடனும் ஒட்ட மாட்டார். தகாத காதல் இவரைத் தழுவவும் செய்யும்.

### தொழில்

பொலிஸ், இராணுவம், தீயணைப்புப் படை, ஆஸ்பத்திரி நர்ஸ், கம்பௌண்டர் எனப் பணிபுரிவர். சர்க்கசில்கூட வேலை பார்ப்பர். அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவராக இருப்பார். எரிபொருள், எண்ணெய் வியாபாரம் செய்வார். என்ஜினியராக, நில நிபுணராவார். புரட்சிக் கூட்டம், தீவிரவாதிகளாகவும் இருப்பார்.

அச்சகம், பத்திரிகை, நூலகம், பதிப்பகம் நடத்தவார். இவை தொடர்பான தொழில் புரிவர். ஸ்ரூடியோ நடத்துவார். சினிமா பிடிப்பார். கதை, கட்டுரை எழுதுவார். பேச்சாளராக, அரசியல் நோக்கராகக்கூட இருப்பார். ராஜதந்திரியாவார். அரசியலில் பதவி கூடப் பெறுவார். நகைச்சுவை நடிகராவார்.

### நோய்

வாத சம்பந்தமான நோயும், உஷ்ண தொடர்பான நோயும் தாக்கும். வயிற்று வலி, கைகால் முடங்கல், கல்லீரல் கெடும். மஞ்சட் காமாலையும், காய்ச்சலும் வரும். சாதாரணமாகக் கெட்ட பழக்கத்திலிருந்து விலகியிருந்தால் நோய் இன்றி வாழ முடியும். வயிற்றில் அறுவை சிகிச்சை நடக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் நன்மை கருதி விவசாய காப்புறுதி திட்டங்கள்

## முல்லைத்தீவு, வவுனியா பதில் உதவிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

மத்திய அரசின் நிதியமைச்சின் கீழ் இயங்கும் கமத் தொழில் மற்றும் கமலநல காப்புறுதி சபையினர் இழப்புக்கள் ஏற்படும் போது அதிலிருந்து மீள்வதற்காக குறைந்த காப்புறுதி கட்டணங்களுடன் விவசாயிகள் மருத்துவ காப்புறுதி, விவசாய உபகரணக் காப்புறுதி மற்றும் விவசாயிகள் திடீர் விபத்து காப்புறுதி எனப் பலதிட்டங்களை விவசாயிகளின் நன்மை கருதி நடைமுறைப்படுத்தி வருவதாக கமத் தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களின் பதில் உதவிப்பணிப்பாளர் பி.பூரணச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

தென்பகுதி விவசாயிகள் காப்புறுதி திட்டங்களில் அதிக ஆர்வம் காட்டுகின்ற போதிலும் போரினால் பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் இது தொடர்பான ஆர்வமும் அக்கறையுமில்லாதவர்களாக காணப்படுகின்றனர்.

இதனால் இழப்புக்கள் ஏற்படும் போது அவர்களும் அவர்களைச் சார்ந்த குடும்பத்தினரும் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

விவசாயிகளின் மருத்துவ காப்புறுதிக்கு ஒரு வருடத்திற்கு ஒருவர் 200 ரூபா மட்டும் செலுத்துவராயின் 10 ஆயிரம் ரூபா வரை மருத்துவ செலவிற்கு அவரால் பணம் பெற முடியும்.

இதேவேளை 2 ஆயிரம் ரூபா செலுத்தினால் 75 ஆயிரம் ரூபா பெறமுடியும்.

தனியார் மற்றும் அரச வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்ற சிட்டைகளை ஒப்படைப்பதன் மூலம் இதனைப் பெறலாம்.

விவசாய உபகரண காப்புறுதியானது உழவு இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம், மருந்து தெளி கருவி உட்பட ஏனைய விவசாய உபகரணங்களுக்கு காப்புறுதி செய்வதாகும்.

உதாரணமாக ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணத்திற்கு வருடம் ஒன்றிற்கு ஆயிரத்து 200 ரூபா செலுத்தும் போது அவ்வுபகரணத்திற்கு 10 வீதத்திற்கு மேல் பாதிப்பு ஏற்படும் போது இழப்பீட்டுத் தொகையை பெறமுடியும்.

திடீர் விபத்து காப்புறுதியானது விவசாயி ஒருவர் காட்டு விலங்குகள் உட்பட ஏனைய உயிராபத்தை ஏற்படுத்தும் விலங்குகளால் தாக்கப்படும் போதும் மற்றும் வீதி விபத்துக்களின் போதும் உதவி புரிகின்றது.

குறித்த விபத்து காப்புறுதிக்கு ஒரு வருடத்திற்கு 660 ரூபா மட்டும் செலுத்துவதன் மூலம் இழப்பு ஏற்படும் போது ஒரு இலட்சம் ரூபாவை பெற முடியும்.

எனவே, இவை தொடர்பான மேலதிக விபரம் தேவைப்படும் விவசாயிகள் தமக்கு அருகிலுள்ள கமநல சேவை நிலையங்களில் தொடர்பு கொள்வதன் மூலமாகவும் அல்லது கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையில் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் அலுவலக தொலைபேசி இலக்கமான 024 222 2490 என்ற தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




## குளங்களை ஆழப்படுத்த மக்கள் கோரிக்கை

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் காணப்படும் ஊற்றுக் குளங்களில் தூர்ந்திருக்கும் சேறுகளை வெளியே எடுத்து குளத்தை ஆழமாக்குவதன் மூலம் தற்பொழுது நீருக்காக அலைந்து திரியும் கால்நடைகளை அழிவிலிருந்து பாதுகாக்க முடியுமென கமநல சேவை நிலையத்திற்கும் அது தொடர்பான அதிகாரிகளுக்கும் கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரிப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குளங்கள் உள்ளன. அக்குளங்கள் அனைத்தும் கடும் வரட்சியால் வற்றி போயுள்ள நிலையில் ஊறுத்துள்ள குளங்களை அடையாளங்கண்டு உடனடியாக ஆழப்படுத்துவதன் மூலம் கால்நடைகள் குடிப்பதற்கேற்ற நீரைப் பெறமுடியுமென அவர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. (2-84)

## அலங்கார உற்சவம்

பூநகரி ஜெயபுரம் அருள்மிகு வல்லவாம்பிகா சமேத வர சித்தி விநாயகர் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நிறைவடையவுள்ளது.

பத்து நாட்களும் சமயப்பெரியார்களின் சமய சொற்பொழிவு இடம் பெறும். தினமும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பஜனையும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2-84)

# பற்றைக்காடு சூழ்ந்து மூடப்பட்டுள்ள ஸ்கந்தபுரம் விவசாய களஞ்சியசாலை

## பயன்பாடின்மையே காரணம்-விவசாயிகள் கவலை

வடக்கு, கிழக்கு நீர்ப்பாசனத் விவசாய திட்டத்தில் 2002 ஆம் ஆண்டு வவுனியா கமநல கேந்திர நிலையத்தின் கீழ் அமைக்கப்பட்ட வவுனியா, ஸ்கந்தபுரம் விவசாய களஞ்சியசாலையானது பயன்பாடின்றி பாழடைந்து காணப்படுவதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பல இலட்சம் ரூபா பெறுமதியில் வடக்கு, கிழக்கு நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட இக் களஞ்சியசாலை, ஸ்கந்தபுரம், தவசிகுளம், இராசேந்திரகுளம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மக்களின் விவசாய உற்பத்தி பொருட்களை களஞ்சியப்படுத்தவும் அவர்களுக்குத் தேவையான உர வகைகளை களஞ்சியப்படுத்தி தேவையான போது விநியோகிப்பதற்காகவும் கட்டப்பட்டிருந்தது.

எனினும், உரிய வகையில் திட்டமிடப்படாது குளத்தின் அருகே கட்டப்பட்டமையாலும் பொறுப்பு வாய்ந்த திணைக்களத்தினரால் பராமரிக்கப்படாமையாலும் இந் நிலையம் தற்போது பற்றைக் காடுகளால் சூழப்பட்டுள்ளது.

இப் பகுதியில் சமூகவிரோதச் செயற்பாடுகளும் இடம்பெறுவதற்கு இக் கைவிடப்பட்ட கட்டடம் துணை நிற்பதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப் பகுதியில் உள்ள விவசாயிகள் தற்போது பல கிலோமீற்றர் தொலைவில் உள்ள நெளுக்குளம் பகுதிக்கே சென்று தமக்கு தேவையான உர வகைகளை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதுடன் அறுவடை காலத்திலும் நெல்லினை விற்பனை செய்வதற்கு நெளுக்குளம் பகுதிக்கே கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

இதனால் அதிக சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் அதிக செலவு ஏற்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



இதனை திருத்தி பயன்படுத்தினால் தாம் இலகுவாக தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

எனவே, உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேணடும் எனவும் அவர்கள் கோரிக்கை விட்டுள்ளனர். (2-250)



நோர்வேயின் நிதியுதவியுடன் உணவு விவசாய ஸ்தாபனம் விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து திக்காய் குளத்தின் கீழ் பரீட்சார்த்த நிலக் கடலை உற்பத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருந்தது. தற்போது பயிரிடப்பட்ட நிலக்கடலை அறுவடைக்குரிய பருவத்தைத் அடைந்துள்ள நிலையில்கடந்த15ஆம்திகதி அறுவடை செய்யும்விழாசெய்கையாளர்களால் நடத்தப்பட்டது. இதில் அரச அதிபர் செயலகம், விவசாயத் திணைக்களம், நீர்ப் பாசன திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் உயர்அதிகாரிகள், அதிகாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவகர் ஆகியோர் கலந்து கொண்டு ஆரம்ப அறுவடையை ஆரம்பித்து வைத்து நிலக்கடலை செய்கையாளர்களின் விடாமுயற்சியை பாராட்டினர். (படம்:-கரணவாய் செய்தியாளர்)

# நீண்டகால வரட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த மழை; தரை பண்படுத்தலுக்கு தயாராகும் விவசாயிகள்

(மல்லாவி)

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியையடுத்து வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சில பிரதேசங்களில் நேற்று முன்தினம் பரவலாக மழை பெய்துள்ளதையடுத்து விளைநிலங்கள் குளிர்ச்சி கண்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் உட்பட மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய சில பிரதேசங்களிலும் மழை பெய்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலும் மழை பெய்துள்ள அதே நேரம் வவுனியா மாவட்டத்திலும் தொடர்ச்சியாக சில நாட்கள் பரவலாகவே மழை பெய்துள்ளது. அத்துடன் மின்னல் தாக்கமும் அதிகரித்துக் காணப்பட்டிருந்தது. இம்மின்னல் தாக்கத்தினால் பௌத்த தேரர் ஒருவர் உட்பட அவரது உதவியாளரும் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ பாதுகாப்பு அமைச்சின் வவுனியா பிரிவினர் விடுத்துள்ள செய் திக் குறிப்பில் அறிவு றுத்தப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இடி, மின்னல்தாக்கம் இடம்பெறுகின்ற வேளை பொதுமக்கள் திறந்த வெளிகளிலும் உயர்ந்த மரங்களின் கீழும் நிற்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவ்வாறு தவிர்க்க முடியாது இருக்கும் சந்தர்ப்பங்களில் நிலத்தில் படுத்துக்கொள்ளுமாறும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளதோடு தொலைபேசிகளில் உரையாடுவது, கணனி பயன்பாடு, தொலைக்காட்சி பார்ப்பது உட்பட இலத்திரனியல் மற்றும் மின்சாதன பயன்பாட்டை தவிர்த்துக் கொள்ளுமாறும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.


நீண்டகாலத்தின் பின்னர் மழை பெய்ததையடுத்து மானாவாரியாக நெல் விதைப்பில் ஈடுபடும் விவசாயிகள் தமது வயல் நிலங்களில் உள்ள செடிகொடிகளை அகற்றுவதோடு தரை பண்படுத்தலுக்கு ஆயத்தமாவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

ஒட்டுமொத்தமாக இம்மழை வீழ்ச்சியை அனைத்து தரப்பினரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதித்தலைவராக சஜித் பிரேமதாச !

## ரணில் ஆதரவு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக மீண்டும் சஜித் பிரேமதாச நியமிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்தும் நோக்கில் இவ்வாறு சஜித் பிரேமதாச கட்சியின் பிரதித் தலைவராக நியமிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

ஏற்கனவே இரண்டு தடவைகள் சஜித் பிரேமதாச ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் பதவியை வகித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றுமையை உறுதி செய்யும் நோக்கில் இவ்வாறான ஓர் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கும், சஜித் பிரேமதாசவிற்கும் இடையில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் சஜித்தை பிரதித் தலைவராக ரணில் முன்மொழிவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சஜித்தை பிரதித் தலைவராக நியமிப்பதற்கு ரவி கருணாநாயக்க, மங்கள சமரவீர உள்ளிட்ட சிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

எவ்வாறெனினும், 1977ம் ஆணடு ரணசிங்க பிரேமதாசவை கட்சியின் பிரதித் தலைவராக நியமிக்க அப்போதைய தலைவர் ஜே.ஆர். ஜயவர்தன தீர்மானித்ததற்கு ரணில் விக்ரமசிங்கவின் தந்தை எஸ்மோட் விக்ரமசிங்கவே பூரண ஆதரவு வழங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்ப்புக்களை தாண்டி ஜே.ஆர். பிரேமதாச கூட்டணி 1977 ஆம் ஆண்டு தேர்தலில் அமோக வெற்றியீட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# ஆட்சியை கவிழ்க்க கூட்டமைப்பு சூழ்ச்சி

## எஸ்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆட்சியை கவிழ்க்கும் சூழ்ச்சித் திட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து நீக்குவதற்கும் அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்கும் தீவிர முனைப்பு காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வட மாகாணசபையும் அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்கில் வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் துரித கதியில் பதவி கவிழ்க்கும் நோக்கில் சில தரப்பினர் கடுமையான முயற்சி மேற்கொணடு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (6)

# நாட்டின் நன்மதிப்பை அதிகரிக்க பாரியளவு நிதி செலவிடும் அரசு

இலங்கை குறித்த நன்மதிப்பை மேம்படுத்தும் பிரசாரப் பணிகளுக்காக அரசாங்கம் பாரியளவில் பணத்தை செலவிட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கை நறித்த நன்மதிப்பை மேம்படுத்தும் நோக்கத்திற்காக அமெரிக்க நிறுவனமொன்றுக்கு 7 இலட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் நந்தலலால் வீரசிங்க, லிபர்ட்டி இன்டர்நசனல் குறூப் நிறுவனத்தின் தலைவர் கொனிபிளக் ஆகியோர் இது தொடர்பிலான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இலங்கைக்கு எதிராக கடுமையான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வரும் நிலையில் அமெரிக்க நிறுவனங்கள் சிலவற்றுடன், அரசாங்கம் ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் நன்மதிப்பை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாறு அரசாங்கம் பாரியளவில் வெளிநாட்டுப் பிரசார நிறுவனங்களுக்கு பணத்தை வாரி இறைத்து வருகின்றது.

இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே 7 இலட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (6)

## கிருஷ்ண ஜெயந்தி

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள கிருஷ்ண ஜெயந்தி உற்சவ நிகழ்வில் அவதாரம் எனும் தலைப்பில் பண்டிதர் பொன்.சுகந்தனின் சிறப்பு சொற்பொழிவு இரவு 7 மணிக்கு இடம்பெற்று தொடர்ந்து பொலி கண்டி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து இரவு 12 மணிக்கு கண்ணன் பிறப்பு வைபமும் இடம் பெறவுள்ளது. இதன் பின்னர் 2.30 மணிக்கு யாழ். பட்டிமன்ற [illegible] வழங்கும் சிறப்பு பட்டிமன்றம் இடம் பெறவுள்ளது. (6-19)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

### தெய்வீக இசையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய தினம் இடம்பெறவுள்ள இசையரங்கத்தில் பாடல் திருமதி.நவமணி பத்மநாதனும், வயலின் கி.பத்மநாதனும், மிருதங்கம் மா.சிதம்பரநாதனும் முகர்சிங் என்.சதீஷ்குமாரும் வழங்கவுள்ளனர்.

### ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவும் கலை நிகழ்வும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய தினம் இளம் சைவப் புலவர் க.கைலைநாதன் வழங்கும் அறம் செய்ய விரும்பு எனும் தலைப்பிலான செறற்பொழிவும், வட்டுக் கோட்டை ஸ்ரீ கண்ணகி அம்மன் அறநெறிப்பாடசாலை, மட்டுவில் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

### ஆன்மீக அருளுரை

நல்லூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் சின்மயா மிஷன் யாழ்.வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வழங்கப்பட்டு வருகின்றது. இன்றையதினம் மனத் தூய்மை எனும் தலைப்பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

### தெய்வீக கலையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் தெய்வீக கலையரங்கு தினமும் மாலை 4 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய நிகழ்வாக தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்கள் வழங்கவுள்ள நடன நிகழ்வும் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலய ஆசிரியர்கள் வழங்கவுள்ள வில்லுப் பாட்டும், தென்மராட்சி கல்வி வலய மாணவர்கள் வழங்கும் இசைநிகழ்வும் இடம் பெறவுள்ளது.

### இசைப்பேருரை

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்ற கம்பராமாயண இசைப்பேருரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லை ஆதீன குரு மூர்த்த மண்டபத்தில் பிரம்மஸ்ரீ. சிவ.வை.நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் சூர்ப்பனகை எனும் தலைப்பிலான இசைப்பேருரை இடம் பெறவுள்ளது.

### இசைநிகழ்ச்சி

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றிய ஆதரவில் பிரமகான சபையினால் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம் பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வில் சாருநிதா சிவஸ்ரீ ராம் சபா நாத குருக்கள். வழங்கும் நடனாஞ்சலி இடம்பெறவுள்ளது.

### நிருத்தியாஞ்சலி

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு கண்டி மயூர நர்த்தன நாட்டியாலய மாணவிகள் வழங்கவுள்ள நிருத்தியாஞ்சலி நிகழ்வு இன்று மாலை 6.30 மணிக்கு நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

# நல்லூரான் திருவடிக்கு இன்று பதினெட்டாம் திருவிழா



## வெண்பா



தூக்கிய ராவணனுந் துன்புற் றருள்வேண்ட
ஆக்க மளித்தருளும் ஆண்டவனின்–நோக்கத்தை
நல்லூரிற் கயிலை விழாநிகழ்விற் காணவே
நல்லறிவு கூடும் நமக்கு


**வைத்திய கலாநிதி சி.இராசரத்தினம்**

## முருகன் புகழ்

நல்லை நகர் உறை கந்தன்–அவன்,
நாம் போற்றித் துதிக்கும் கதிரேசன்!
அப்பனின் விழித்தீப்பொறியிலுதித்த சரவணன்,
அடியவரின் அவலங்களை ஒழிக்கும் சண்முகன்!
கார்த்திகைக் கன்னியர் மடிதவழ் கார்த்திகேயன்,
காண்பவர் மனதை விட்டகலா வடிவேலன்!
கைலைமலையுறை நாதனின் திருக்குமரன்,
கையெடுத்துக் கும்பிட்டோரைக் காக்கும் கடம்பன்!
கல்நெஞ்சம் கசிந்துருகக் காட்சிதரும் அழகன்–அவன்
நல்லையில் குடிகொண்ட நம் நல்லைக்கந்தன்.

**திருமதி. துளசி சிவதொண்டன்**

## கந்தனைப் பாடி இறைஞ்சுவோம்



அப்பனின் நெற்றிக் கண்ணில் உதித்த திருக்குமரனை
அம்மையின் அரவணைப்பில் ஒன்றான ஆறுமுகனை
சரவணப் பொய்கையில் தோன்றிய சரவணபவனை
சூரனின் உடல் கிழித்த சூர–சம்காரனை
தந்தைக்கே குருவாயமர்ந்த சிவகுருநாதனை
தினைப்புனக் காரிகையைக் கரம்பிடித்த வள்ளிமணவாளனை
அனுதினமும் நாம் போற்றிப் பாடிடுவோம்!
அவனருள் வேண்டி நாம் இறைஞ்சிடுவோம்!

**திருமதி திருமகள் முகுந்தராஜ், ஆனைக்கோட்டை.**

## தாள் பணிவோம்



நல்லூர்க் கந்தன் தாள் பணிய
நலங்கள் வந்து சேரும்
நாளும் அவனைத் தொழுது போற்ற
தீவினைகள் அகன்றோடும்
வல்லோனின் புகழைப் பாட
குறைகள் பல தொலையும்
அழுதழுது அவனை வேண்ட
அல்லல் எல்லாம் தீரும்.

**திருமதி.திலகா சண்முகம்,**
**ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி.**

## நல்லருள் தருவாய் நல்லூர் கந்தா



காலை விழித்தெழுந்து
கன்னித்தமிழாலே கவி ஒன்று தொடுத்து
கலியுக வரதனாம் கந்தனைக் காண
நல்லூர் நாடி ஓடி வந்தேன் கந்தா
ஏழை அடியவனுக்கு நல்லருளை தந்திடுவாய்
நற்றமிழ் தெய்வமே நல்லூர் கந்தா

**பிளவத்தை பட்டங்கட்டி**

## நல்லைக் கந்தன் நனிவெண்பா

நல்லைக் குமரன்தாள் நாளுந்தொழுதுவெழ
வெல்லையிலாத் துன்பமெழுந்தோடும்– வல்வினையும்
ஓடி மறைந்து உள்ளமெலாம் இன்பமயம்
சுவடிவரும் என்றே கொள்.

**கலாபூஷணம், சந்தக் கவிஞர்,**
**நவ.பாலகோபால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. விசாரணை பற்றிய ஓர் பார்வை



கடந்த 27.03.2014 அன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் இறுதிப் போரில் நிகழ்ந்த பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை கடந்த வாரத்திலிருந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் செயலகம் தொடங்கியுள்ளது.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாதத் தீர்மானம் அமையாத பொழுதும், தமிழீழத் தனியரசுக்கான நீண்ட பயணத்தில் ஒரு முக்கிய மைல் கல்லாக இத்தீர்மானமும், அதன் விளைவாகக் கடந்த வாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் செயலகம் தொடங்கியிருக்கும் விசாரணையும் அமைந்துள்ளன எனலாம்.

அதாவது இதுகாறும் உள்நாட்டுப் பிரச்சினை என்றும், பயங்கரவாதப் பிரச்சினை என்றும் சிங்களத்தால் சிறுமைப்படுத்தப்பட்டு வந்த தமிழ்த் தேசியப் பிரச்சினையை முழு அளவில் அனைத்துலக மயப்படுத்துவதற்கான கதவுகளை இவ் விசாரணை திறந்துவிட்டுள்ளது. அதேநேரத்தில் இது எமக்குச் சாதகமாக அமைவதும், பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதும் நாம் கையாளும் இராஜரீக யுக்திகளிலேயே முற்று முழுதாகத் தங்கியிருக்கின்றது என்பதையும் மறுக்க முடியாது.

தமிழீழத் தனியரசை நிறுவுவதே இன்று உலகெங்கும் பரந்து வாழும் ஒவ்வொரு தமிழர்களின் வேணவாவாக இருக கின்ற பொழுதும் எவ்வாறு இவ் இமாலயச் செய்கையைப் புரியப் போகின்றோம் என்பதில் இன்னமும் தெளிவான பார்வை இல்லை என்பதுதான் யதார்த்தம்.

தமிழீழ மண்ணில் ஆயுதப் போராட்டம் நடைபெற்ற காலப்பகுதியில் தமிழீழத் தனியரசை நிறுவுவது தொடர்பான தெளிவான மூலோபாயம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இருந்தது. ஆயுதப் படைகளை அனுப்பிக் கிழக்கு வங்கத்தை பாகிஸ்தானிடம் இருந்து பிரித்தெடுத்து, வங்காளதேசம் என்ற தனியரசை நிறுவியது போன்று, தமிழீழத் தனியரசை இந்தியா நிறுவிக் கொடுக்கும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைகளும், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் போன்ற ஆயுத இயக்கங்களின் அரசியல்பீடங்களை அலங்கரித்து நின்ற 'மெத்தப் படித்த மேதாவிகளும்' இலவு காத்த கிளிகளாகக் கனவு கண்டு கொண்டிருக்க, ஆயுதப் போராட்டத்தின் மூலமும், அதற்குச் சமாந்தரமான அனைத்துலக ஆதரவைப் பெறும் அரசியல் - இராஜரீக நடவடிக்கைகள் வாயிலாகவுமே தமிழீழத் தனியரசை நிறுவ முடியும் என்ற தெளிவான தரிசனத்துடன் போராட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னெடுத்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் இடைநிறுத்தம் பெற்றுப் போனது வேறு விடயம். அதற்கு ஆயிரம் காரணங்கள் உண்டு. அவற்றை இங்கு ஆராய்ந்து 'சடலப் பரிசோதனை' செய்வது எமது நோக்கமன்று.

ஆனாலும் எந்தவொரு மிதவாத அரசியல் தலைமைகளாலும் சரி, எழுபதுகளின் பிற்பகுதியிலும், எண்பதுகளின் நடுப்பகுதியிலும் ஏனைய ஆயுத இயக்கங்களின் தலைமைகளை அலங்கரித்து நின்ற 'மெத்தப் படித்த மேதாவிகளாலும்' சரி சாதிக்க முடியாததைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சாதித்தது என்பதுதான் யதார்த்தம். அதாவது தமிழீழ தாயகத்தின் எழுபது விழுக்காடு வரையான பகுதிகளை விடுவித்து, அங்கு நடைமுறை அரசு ஒன்றை நிறுவி, அவ் அரசைப் பாதுகாப்பதற்கான ஆயுதப் படைகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பேணியது.

இன்று நிலைமை அவ்வாறு இல்லை என்பது வேறு விடயம். அதேநேரத்தில் நான்காம் கட்ட ஈழப்போரில் சிங்களபபெரும்பான்மையினர் பெற்ற வெற்றிக்கு வியாக்கியானங்கள் கூறித் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூலோபாயங்கள் பற்றிக் குறைகூறும் எவரிடமும் தமிழீழத் தனியரசை அடைவதற்கான தெளிவான தரிசனமோ, மூலோபாயமோ இல்லை என்பதுதான் யதார்த்தம்.

பனிப்போரின் முடிவுடன் செத்துப் போன 'கம்யூனிச' சித்தாந்தத்திற்கு உயிரூட்டமளித்து 'மம்மி' அரசியல் செய்யும் 'முற்போக்கு வாதிகளைப்' பொறுத்தவரை சிங்களப் பாட்டாளி வர்க்கத்துடனும், உலகின் ஏனைய பாட்டாளி சமூகங்களுடன் கைகோர்த்துப் போராடுவதே தமிழீழத்தை அடைவதற்கான வழியாக முன்மொழியப்படுகிறது. தமிழீழ மக்களின் ஆயுத போராட்டத்தை அழிப்பதில் சிங்கள தொழிலாளர் வர்க்கம் வகித்த பங்கையும், அதற்கு உடந்தையாக கம்யூனிச சித்தாந்தம் பேசும் சீனா, கியூபா போன்ற நாடுகள் நின்றது இவர்களுக்கு தெரியாது போலும்!

அடுத்தது உழுத்துப் போன பூகோள சித்தாந்தம் பேசுபவர்கள். இந்து சமுத்திரப் பிராந்தியத்தைத் தமது பிடிக்குள் வைத்திருப்பதில் இந்தியாவிற்கும் அக்கறை உண்டு, சீனாவிற்கும் அக்கறை உண்டு, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகிற்கும் அககறை உண்டு. இங்கு புதிதாக எதுவுமலலை. 'இநது சமுத்திரத்தை எவர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றார்களோ அவர்களின் கட்டுப்பாட்டிலேயே ஆசியா இருக்கும்' என்றும், உலகின் 'ஏழு சமுத்திரங்களுக்குமான திறவுகோலாக இந்து சமுத்திரமே திகழும்' என்றும் ஏறத்தாள நூறு ஆண்டுகளுக்கு முன்னரே அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற கடற்படைத் தளபதியான அட்மிரல் அல்பிரட் தயார் மாகன் கூறியிருக்கின்றார்.

அதேபோன்றதுதான் ஈழத்தீவின் முக்கியத்துவமும். ஏறத்தாள நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் கி.பி. 1611ஆம் ஆண்டளவில் ஸ்பெயின் மன்னருக்கு எழுதிய மடல் ஒன்றில், 'முழு இந்தியாவிற்குமான திறவுகோலாக சிலோன் என்ற தீவு திகழ்கின்றது' என்று ஸ்பானிய கடற்படை தளபதியான அன்ரோனியோ மார்ட்டின்ஸ் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார். இதற்கு ஏறத்தாள இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. 1798ஆம் ஆண்டு ஈழத் தீவை ஒல்லாந்தர்களிடமிருந்து கைப்பற்றிய செய்தியை பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அறிவிக்கும் பொழுது, 'உலகிலேயே மிகப் பெரும் பெறுமதி வாய்ந்த நிலத்தைக் கைப்பற்றியிருக்கிறோம்? என்று அன்றைய பிரித்தானியப் பிரதமர் வில்லியம் பிற் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான முக்கியத்துவத்தைக் கொண்ட ஈழத் தீவையே 04.02.1948 அன்று சிங்களவரிடம் கையளித்துவிட்டுப் பிரித்தானியா அகன்று கொண்டது!

எனவே, அமெரிக்கா என்ற உலக வல்லரசுக்கும், இந்தியா, சீனா போன்ற பிராந்திய வல்லரசுகளுக்கும் மத்தியில் நிகழும் ஆதிக்கப் போட்டிகளின் விளைவாகத் தமிழீழம் மலரும் என்று கனவு காண்பதாலோ, அன்றி எதிர்காலத்தில் சீனாவிற்கும், இந்தியாவிற்கும் இடையில் பெரும் போர் வெடிக்கும் என்றும், அந்தப் போரின் விளைவாகத் தமிழீழம் மலரும் என்றும் கற்பனையில் மிதப்பதாலோ எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. அவ்வாறு அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற ஏதேனும் ஒரு நாட்டுக்கிடையில் பெரும் யுத்தம், அதுவும் அணு ஆயுத யுத்தம், வெடிக்கும் பட்சத்தில் அதனால் மிக மோசமாகப் பாதிக்கப்படப் போவதும், பெரும் அழிவுகளை சந்திக்கப் போவதும் ஈழத்தீவில் வசிக்கும் மக்களே!

அடுத்தது தமிழீழத்தை இந்தியா பெற்றுத் தரும் என்ற கனவில் மிதப்பவர்கள். இவர்களைப் பொறுத்தவரை தமிழீழத்திற்கான திறவுகோல் டில்லியில்தான் இருக்கின்றது! இன்று தமிழீழ மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் அவர்கள், தனது சொல்லுக்குக் கட்டுப்படும் ஆட்சி டில்லியில் அமைந்தால் இந்தியப் படைகளை அனுப்பித் தனி ஈழத்தை நிறுவுவேன் என்று கூறியிருப்பதும், தமிழீழத் தனியரசுக்கான பொது வாக்கெடுப்பை ஐ.நா.வின் கண்காணிப்பின் கீழ் நடத்துமாறு இந்திய மத்திய அரசை வலியுறுத்தும் பாராட்டத்தக்க விடயங்களே: ஆனால் இவையெல்லாம் எப்பொழுது சாத்தியமாகும்? என்பதுதான் இங்கு எழும் முக்கிய கேள்வி.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 21.02.2002 அன்று முதல் இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணையம் செயற்பாடுகளை முன்னெடுத்த 15.11.2011 வரையான காலப்பகுதியில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளைக் கடந்த வாரத்திலிருந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் செயலகம் தொடங்கியுள்ளது.

இங்கு விசாரிக்கப்படுவது இலங்கை அரசாங்கம் மட்டுமல்ல: தமிழீழ விடுதலைப் புலிகளுமே. இலங்கை அரசாங்கம் மட்டுமன்றி தமிழீழ விடுதலைப் புலிகளும் விசாரிக்கப்பட வேண்டுமென ஊடகங்களில் செவ்வி வழங்கியவர்கள் இந் நிலைக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டவர்கள்.

தமிழீழ தேசத்தின் மீது இனவழிப்பை சிங்களம் புரிந்திருக்கக்கூடும் என்ற கோணத்தில்கூட இவ் விசாரணை ஆரம்பிக்கப்படவில்லை. மாறாக மனித உரிமை மீறல்கள் என்ற பரந்து பட்ட கோணத்திலேயே இவ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இவ் விசாரணைக்குள் போர்க் குற்றங்களும், மானிடத்திற்கு எதிரான குற்றச்செயல்களும் உள்ளடக்கப்பட்டிருந்தாலும், இனவழிப்பு என்ற குற்றம் இதுவரை உள்ளடக்கப்படவில்லை.

ஆனால் தமிழினத்தை முழுமையாக அல்லது பகுதியாக அழிக்கும் நோக்கத்துடனேயே இப் போர்க்குற்றங்களையும், மானிடத்திற்கு எதிரான குற்றச்செயல்களையும், மனித உரிமை மீறல்கள் என்று கூறப்படும் இதர குற்றங்களையும் சிங்களம் புரிந்தது என்ற மெய்யுண்மையை ஆதாரபூர்வமாக நாம் முன்வைத்தால் நிச்சயம் இனவழிப்பிற்கு தமிழினம் ஆளாகியது என்ற உண்மையை உலக அரங்கில் நாம் இடித்துரைக்க முடியும்: இதன்மூலம் சேர்பியாவிலிருந்து பிரிந்து செல்வதற்கு அன்று கொசோவர்களும், ஈராக்கிலிருந்து பிரிந்து செல்வதற்கு இன்று குர்து இன மக்களும் வலியுறுத்துவது போன்று இனவழிப்பிற்கான பரிகாரமாகத் தமிழீழத் தனியரசை நிறுவும் அங்கீகாரத்தை மேற்குலகத்திடமிருந்து நாம் வலியுறுத்த முடியும்.

உலகப் பாட்டாளிகளின் புரட்சியும், இந்து சமுத்திரத்தையும், ஈழத்தீவையும் மையப்படுத்திய வல்லரசுகளுக்கிடையிலான பெரும் போரும், தமிழீழத்திற்கு இந்திய ஆயுதப் படைகளை செல்வி ஜெயலலிதா அவர்கள் அனுப்புவதும் இப்போதைக்கு நடந்தேறப் போவதில்லை. அவ்வாறு என்றோ ஒருநாள் நடந்தேறுமா? என்பதுகூட இப்போதைக்குக் கேள்விக் குறிதான்.

யதார்த்தம் இவ்விதம் இருக்கும்பொழுது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் செயலகத்தால் தொடங்கப்பட்டிருக்கும் விசாரணைப் பொறிமுறை என்ற கதவின் ஊடாகத் தமிழீழத் தனியரசு நோக்கிய எமது அரசியல் - இராஜரீகப் பயணத்தைத் தொடங்குவதுதான் இப்பொழுது யதார்த்த பூர்வமானது: சாத்தியமானதும்கூட. அதுவும் தமிழீழத்தில் தமிழினத்திற்கு சிங்களம் இழைத்தது வெறுமனவே போர்க் குற்றங்களும், மானிடத்திற்கு எதிரான குற்றச்செயல்களும், இதர மனித உரிமை மீறல்களும் மட்டுமன்றி ஒரு திட்டமிட்ட இனவழிப்பு யுத்தம் என்பதை நிரூபிப்பதுதான் எம்முன் இன்றுள்ள தலையாய கடப்பாடாகும்.

சிங்களத்தின் இனவழிப்பு யுத்தத்தால் உறவுகளை இழந்தும், உடல் அவயங்கள் சிதைந்தும், உடமைகளை இழந்தும், பட்டினிச் சாவுக்கு ஆளாகியும், இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்க்கப்பட்டும், உலகெங்கும் அலைந்து உழலும் எம்மவர்களை அணிதிரட்டி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் செயலகத்தின் விசாரணைப் பிரிவுக்கு முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்குப் புலம்பெயர் தேசங்களில் இயங்கும் தமிழ்த் தேசிய அமைப்புக்கள் நடவடிக்கை எடுப்பது இதற்கான முதற்படியாக அமையும். *-சேரமான்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்கால காணி உரித்து குறித்த புதிய சட்டதிருத்தம்!

(கொழும்பு)

இலங்கையில் தனியார் காணியை, 10 ஆண்டுகளுக்கு மேலாக எவ்வித தடைகளும் இன்றி வைத்திருந்த காரணத்தைக் காட்டி, அதனைச் சொந்த மாக்கிக் கொள்ள இருக்கின்ற சட்ட ஏற்பாடு, வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் யுத்த காலத்துக்கு பொருந்தாது என்று கூறுகின்ற புதிய சட்ட மசோதா தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்துவருகின்றது.

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் நிலவிய யுத்த சூழ்நிலைகள் காரணமாக தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறியவர்கள், அவர்களின் காணி உரிமையை மீளப் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவருமாறு எல்எல்ஆர்சி ஆணைக்குழு ஏற்கனவே பரிந்துரை செய்திருந்தது.

1983 ஆம் ஆண்டு மே முதலாம் திகதி தொடக்கம் 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கும் மட்டும் பொருந்தும் விதத்தில், ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்டத்தில் புதிய திருத்தம் கொண்டு வரப்படுகின்றது.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக தமது அசையாச் சொத்துக்கான உரிமையை பாதுகாப்பதற்கு இயலாதவராக இருந்து வெளியேறியவர்களுக்கே புதிய சட்டத் திருத்தம் ஏற்புடையதாகின்றது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் யுத்த காலத்தில் பெருமளவான மக்கள் தமது காணிகளை விட்டு வெளியேறியிருந்தனர்

இந்த சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேறி ஓராண்டு காலப்பகுதிக்குள் சட்டபூர்வ சொந்தக்காரர்கள் தமது காணிக்கான உரித்தினை நீதிமன்றத்தினூடாக கோர முடியும்.

"எனினும் புதிய சட்டம் முதல் 12 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகுமாக இருந்தால், அதன் பின்னர் போடப்படும் வழக்குகள் நடைமுறையில் எப்படி அமையும் என்பதை நீதிமன்ற வழக்குகளில் தான் தீர்மானிக்கலாம்" என்று சட்டத்தரணி கே.வி. எஸ். கணேஷராஜன் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு, கிழக்குப பிரதேசங்களில் பெருமளவான மக்கள் குடியிருப்பு காணிகள் ஆயுதப்படைகளின் பாவனைக்காக கையகப்படுத்தப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, வெளிநாட்டவர்களுக்கு காணி விற்பதில் கொண்டுவரப்பட்ட தடை தொடர்பான மற்றுமொரு சட்டமூலத்திற்கும் இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் 100 வீதம் முத்திரைக் கட்டணம் செலுத்தி வெளிநாட்டவர்கள் காணி வாங்கலாம் என்று இருந்த சட்ட ஏற்பாடு கடந்த ஆண்டு மார்ச் மாதம் இரத்து செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, (தொடர் மாடிகளில் 4 ஆம் மாடி அல்லது அதற்கு மேல் உள்ள குடியிருப்புகளைத் தவிர) வெளிநாட்டவர்களுக்கான காணி விற்பனை இலங்கையில் முழுமையாகத்தடை செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# உரிய பாதுகாப்பு இன்னும் இல்லை

## உபுல் கவலை

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரியவிற்கு இன்னமும் போதிய ளவு பாதுகாப்பு வழங்கப்படவில்லை என குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

சீருடை அணிந்த பொலிஸாரையே கடமையில் ஈடுபடுத்துமாறு கோரியதாகவும் அதற்கு உரிய பதிலளிக்கப்படவில்லை எனவும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. தமக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரியவும் தெரிவித்தார்.



பாதுகாப்பு வழங்கப்படும் என பொலிஸார் நீதிமன்றில் வாக்குறுதி அளித்த போதிலும் அந்த வாக்குறுதி இதுவரையில் நிறைவேற்றப் படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சாதாரண பொதுமகன் ஒருவருக்கு வழங்கப்படும் பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளே செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். பொலிஸார் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவமொன்றில் பாதிக்கப்பட்ட நபர் ஒருவரின் சகோதரருக்கு ஆறு பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார். இதேவேளை, சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரை பின்தொடர்ந்தவர்கள் தொடர்பான புகைப்படங்களை பொலிஸார் வெளியிட வேண்டுமென சங்கத்தின் செயலாளர் அஜித் பத்திரண தெரிவித்துள்ளார். (6)

# தமிழக மாணவர்களின் மீதான தாக்குதலுக்கு கடும் கண்டனம்

(குருமன்காடு)

சமரசங்களை மறுத்து தன்னலன்களை வெறுத்து பிறர் இன்புற்றிருக்க போராடுகிற தமிழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை சென்னை சத்யம் திரையரங்கில் இடம்பெற்ற "புலிப்பார்வை" சிசை வெளியீட்டு நிகழ்வில், ஜனநாயக முறையில் தங்கள் எதிர்ப்புக்களை காட்டச் சென்ற தமிழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட செய்தி மிகவும் அதிர்ச்சியைத் தருகின்றது.

மிக நெடிய காலமாக ஈழத் தமிழினத்தின் மீது இழைக்கப்பட்ட இன அழிப்பானது 2009 இல் உச்சத்தைத் தொட்டது. இறுதிப்போரின் இறுதிக் கணங்களில் இடம்பெற்ற கொடூரமான சம்பவங்கள் காணொளி மற்றும் புகைப்பட பதிவுகளாக வெளி வந்து உலகை உலுக்கிக் கொண்டிருக்கிறன. அன்று வேடிக்கை பார்த்த உலகின் மனச் சாட்சியை இன்று தட்டி எழுப்பிக் கொண்டிருக்கின்றன. அதன் விளைவாக எழுந்த தமிழக மாணவர் எழுச்சி தமிழின வரலாற்றின் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். இதன் விளைவாக ,தமிழக மக்களின் உணர்வின் வெளிப்பாடாக தமிழக சட்டசபையில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

இந்நிலையில் எண்ணிலடங்காத ஒப்பற்ற தியாகங்களால் கட்டி எழுப்பப்பட்ட தமிழரின் உரிமைப் போராட்டத்தின் நோக்கங்களை சிறுமைப்படுத்தும் வகையிலும் உலகின் மனச்சாட்சியைக் கேள்வி கேட்ட பல உண்மைப் பதிவுகளை செயலிழக்கச் செய்யும் வகையிலான காட்சிகள்

"புலிப்பார்வை" திரைப்பட முன்னோட்டக் காட்சியில் இருந் தமை உலகத்தமிழினத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தொடர்ந்து திரைப்படத்தின் சிறப்புக் காட்சியை பார்வையிட்ட தமிழக மாணவர்கள் மற்றும் உணர்வாளர்களின் கருத்துக்கள் மூலம் அப்படைப்பு முற்றிலும் தவறான கருத்தியலால் புனையப்பட்டது என நிரூபணமாகியுள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தவறான கருத்தியலைக் காவும் படைப்புக்கு எதிராக தமது எதிர்ப்பை ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்திய தமிழக மாணவ தம்பிகள் தாக்கப்பட்டது உலகத் தமிழர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என தனது கண்டனத்தை உறுப்பினர் தெரிவித்தார். (6-250)

# இன்று ஒரு தகவல்

## மன ஆரோக்கியம்

நாம் ஒருவரது வீட்டிற்குப் போயிருக்கிறோம். அவர் ஒரு கிளாஸில் பழச்சாறு கொண்டுவந்து வைக்கிறார். உடனே நாம் என்ன செய்வோம். அடுத்தவர்கள் யாரும் வருவதற்குள் அதை எடுத்து குடித்து விடுவோம்.

அதை விட்டு அதை கொண்டு வந்தவரிடம் "அதன் விலை என்ன?" என்றா கேட்டிக்கொண்டிருப்போம்.

நாம் கேட்க மாட்டோம். ஆனால் காந்திஜி அப்படி கேட்டார்.

1935 மே மாதத்தில் ஒரு நாள் காந்திஜி டெல்லியில் இருந்தார்.

அப்பொழுது அவருக்கு இரண்டு டம்ளர் மர்ம்பழச்சாறு கொண்டுவரப்பட்டது.

கொண்டுவந்து கொடுத்தவர் காந்திஜிக்கு உதவி செய்வதற்காக அவருடனேயே இருந்த மனுபென்காந்தி என்ற அம்மா.

காந்திஜி அவரிடம் "இதன் விலை என்ன?" என்று கேட்டார்.

சும்மா வேடிக்கைக்காகத்தான் இப்படி கேட்கிறார் என்று நினைத்த அந்த அம்மா பதில் எதுவும் பேசாமல் இருந்து விட்டார்.

அதுவுமில்லாமல் அதன் விலையைக் கேட்டால் காந்திஜி அதைக் குடிக்க மாட்டார் என்றும் அவருக்கு தெரியும்.

நேரமும் கடந்து கொண்டிருந்தது. அந்த பழச்சாறு வைத்த இடத்தில் அப்படியே இருந்தது. காந்திஜி சாப்பிடவில்லை.

மனுபென்காந்தி பார்த்தார். மெதுவாக காந்திஜியிடம் போய் "அதைச் சாப்பிடுங்களேன்!" என்றார்.

"பழச்சாறு விலையென்னவென்று கேட்டேன். அதற்குப் பதில் இல்லை அது முதல் தவறு. பதிலை எதிர்பார்த்திருந்தும் அதைப் பற்றி விசாரிக்கவில்லை. அது இரண்டாவது தவறு. இப்படி இரண்டு தவறுகளைச் செய்துவிட்டு என்னிடம் வந்து 'இதைச் சாப்பிடுங்க' என்று சொன்னால் அது எப்படி?" என்றார் காந்திஜி.

மனுபென்காந்தி என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்துப்போய் நின்று கொண்டிருந்தார்.

காந்திஜி தொடர்ந்து சொன்னார்:

"இப்பொழுது என் முன்னால் வைத்திருக்கும் இந்த பழச்சாறு விலை கூடியதாக இருக்கும்!

இந்த பழச்சாறு இல்லாமல்கூட என்னால் இருக்க முடியும். ஆனால் அவசியமான பொருட்களை வாங்குவதற்குக்கூட வழியில்லாத மக்கள் இந்த நாட்டில் நிறையப்பேர் இருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது எனக்கு எதற்கு இந்த விலையுயர்ந்த பானம்?

இதை இப்பொழுது சாப்பிட்டால் என் உடல் வேண்டுமானால் ஆரோக்கியமாகலாம். ஆனால் என் மனம் அமைதி அடையாது. எனக்கு என்னுடைய உடல் ஆரோக்கியத்தைவிட மன ஆரோக்கியம்தான் முக்கியம்! அதனால் இதை நான் குடிக்க மாட்டேன் எடுத்துக் கொண்டு போய்விடு!" என்றார்.

அந்தச் சமயத்தில் ஓர் அகதிப்பெண் இரண்டு குழந்தைகளுடன் காந்திஜியைப் பார்ப்பதற்கு வந்தார்.

காந்திஜி உடனே தனக்கு முன்னால் இருந்த பழச்சாற்றை எடுத்து அந்தப் பெண்ணிடமும் குழந்தைகளிடமும் கொடுத்து குடிக்கச் சொன்னார். அவர்கள் அதை வாங்கி சந்தோசத்துடன் பருகினார்கள்.

அதைப் பார்த்த காந்திஜியின் முகத்தில் ஒரு புன்னகை-பரவசம்-திருப்தி! அவர் மனம் நிறைந்தது.

அப்பொழுது அவர் சொன்னார்:

ஆண்டவன் தக்கசமயத்தில் கைகொடுப்பான் என்பதற்கு இதுவே அத்தாட்சி! நான் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போதுகூட கடவுளின் கருணையால் அந்த சூழ்நிலை என்னை பாதிக்கவில்லை.

என்னோடு இவ்வளவு நாள் பழகியும் இங்கிருப்பவர்கள் எனக்கு அதிகவிலையுள்ள பழரசத்தை கொடுத்தார்கள். ஆனால் சரியான நேரத்தில் அதைச் சாப்பிட வேண்டியவர்களை என்னிடம் அனுப்பி வைத்து என்னை சந்தோசப்படுத்தினார் கடவுள், அவருக்கு நன்றி" என்றார் காந்திஜி.

உடல் ஆரோக்கியத்தைவிட மன ஆரோக்கியம்தான் முக்கியம் என்று சொன்னார் பாருங்கள். அதை நாம் எல்லோரும் மனப்பூர்வமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒருவர் இருந்தார். அவர் தினமும் காலையில் கோப்பி குடிக்கும் நேரத்தில் பக்கத்து வீட்டுக்காரர் வந்து சேர்ந்து விடுவார். இவரும் தனது கோப்பியை மனப்பூர்வமாக அவரிடம் கொடுத்து விடுவார்.

"ஆண்டவன்தான் தினமும் அவரை எங்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்" என்பார்.

"ஏன் அப்படி சொல்றீங்க" என்று கேட்டேன்.

"எனக்கு எனது உடல் ஆரோக்கியம்தான் முக்கியம். இதைக் கடவுள் புரிந்து கொண்டு எங்கள் வீட்டுக் கோப்பியை குடிக்க தினமும் அடுத்த வீட்டுக்காரரை எங்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறார்!" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதோணியில் கால்வைக்கும் இலங்கை அரசின் செயற்பாடு

இனங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டினை ஒரு வழிப்பாதையில் மிகவும் சிறப்பாக முன்னெடுத்துச்செல்ல முடியும் எனும் தலைப்பில் சண்டே லீடரில் கலாநிதி ஜெகான் பெரேரா எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது.

-தமிழில் யோகர்-

அரசாங்கம் அண்மைக் காலமாக நாட்டின் சிவில் சமூக அமைப்புக்களுடன் எதிர் மனப்பான்மையுடன் கூடிய ஓர் கடும்போக்கு நடைமுறையினை வெளிப்படை யாகவே பிரயோகித்து வருவது தெரிந்ததே. போர்க் குற்றங்கள் மட்டில் ஐ.நா. மனிதவுரிமை சபையினால் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவாவில் வரவிருக்கும் தீர்மாணத்திற்கு முகங் கொடுக்கவேண்டிய நிலையை நோக்கி விரைந்து கொண்டிருப்பதான தருணத்திலும் மனிதவுரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் சிவில் சமூக குழுக்கள் போன்றவற்றுக்கெதிராக அரசு மேற்கொள்ளும் இந்நடவடிக்கைகள் மோசமான ஒரு திருப்பு முனையை நோக்கிச் சென்று கொண்டிருப்ப தாகவே தோன்றுகின்றது. மனி தவுரிமை பாதுகாவலர்கள் பலரும் கைது செய்யப்பட்டதுடன் சிலர் சிறைக் கூடங்களில் தொடர்ந்தும் நலிவடையும் அவல நிலையிலேயே இருக்கின்றனர். இந்த வருடம் மார்ச் மாதம் மற்றும் ஏப்ரல் மாதங்களின்போது வடக்கில் பெருமளவில் இடம்பெற்ற கைது நடவடிக்கைகளின்போது இடம்பெற்ற திருமதி பாலேந்திரன் ஜெயக்குமாரியுடைய கைதே அனைத்து நடவடிக்கைகளிலும் கூடுதல் பரிதாபகரமானதாகவும் மனதை நெருடுவதாகவுமிருக்கின்றது. போரின் இறுதிக் கட்டத்தில் தனது மகளை இழந்த இந்தத் தாயார் மனிதவுரிமைக் குழுக்களுடன் சேர்ந்து இயங் கும் ஒரு தீவிர செயற்பாட்டாளராகியிருந்தார். ஆயினும் இவர் தனது இளைய மகளுடனேயே கைது செய்யப்பட்டிருந்தார். விசாரணை யின் பொருட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இத்தாயார் பொது மக்களின் பார்வைக்கு மறைவாகவே வைக்கப்பட்டுள்ளார். இப் போது USAID அமெரிக்க தொண்டு நிறுவனமொன்று சம்பந்தப்பட்ட விடயத்தில் அரசின் சர்வதேச மற்றும் சிவில் சமூக விரோத நடவடிக்கை வீறு கொண்ட ஒருவித எழுச்சிக் கால கட்டமொன்றில் பிரவேசித்திருப்பதாகவே தோன்றுகிறது. எதிர்வரும் தேசிய மட்ட தேர்தல்களின் பொருட்டு வாக்காளருக்கு அறிவூட்டும் கல்வி நிகழ்வுகளுக்கான அறைகூவலொன்றினை இந்நிறுவனம் விடுத்திருந் தது.

கடந்த இருவாரங்களுக்குள்ளாக அரச சார்பற்ற நிறுவனங்களை கூடுதல் கடுமையான புதிய ஒழுங்கு முறைகளுக்குட் கொண்டுவரும் நடவடிக்கையில் அரசாங்கம்



இறங்கியுள்ளது. இதில் முதலாவது பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தொண்டு நிறு வனங்களுக்கான பொதுச் செயலகத்தினால் தெளிவற்ற சந்தேகத்திற்குரிய வார்த்தைப் பிரயோகங்களுடன் வெளியிடப்பட்ட சுற்றுநிருபமொன்றேயாகும். சுற்று நிருபமானது தொண்டு நிறுவனங்கள் தமக்குள்ளான அதிகார ஆணைக் குட்பட்ட விதமாகவே தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமென அறுதியிட்டுக் கூறுகிறது. அதாவது பத்திரிகையாளருக்கான பயிற்சிகள் செயற்பட்டறைகள் போன்றவற்றை நடத்தவோ அல்லது பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் விடவோ அவற்றால் முடியாது. இந்த அறிவுறுத்தல் அனைத்துத் தொண்டு நிறுவனங்களுக்கும் பொதுவானதா அல்லது பிரத்தியேகமான முறையில் சிலவற்றுக்கு மட்டும் பொருந்துமா என்பது கேள்விக்கிடமானதாகவே உள்ளது. மற்றுமொரு மிக அண்மைக்காலமாக அறிவுறுத்தலொன்று நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின்கீழ் இயங்கும் வெளிநாட்டு மூல வளங்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. அதன்படி அரச சார்பற்ற நிறுவ னங்கள் வெளிநாட்டு நிதிப் பங்களிப்பில் மேற்கொள்ளும் தமது செயற்பாடுகளனைத்திற்கும் முன் அனுமதி பெற வேண்டுமென்பதுடன் பொதுமக்களின் எந்த அமைப்புக் களும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரி களுடன் அந்தந்த விடய சம் பந்தமாக கலந்துரையாடாமல் அவற்றில் பங்கேற்பதற்கு எதிராக எச்சரிக்கையும் விடுத்துள்ளது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் சிவில் சமூகத்தினருக்கு வாய்ப்பூட்டுப் போடுவதுடன் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தக் கூடிய அணுகுமுறைகளைக் கையாளும் எவரையும் தனிமைப்படுத்தி அசௌகரியத்திற்குள்ளாக்கும் முயற்சியொன்றாகவே காணக் கூடியதாயிருக்கிறது.

சிவில் சமூகத்தினரின் செயற் பரப்பினை நாட்டிற்குள்ளாக கட்டுப்படுத்தும் அதே நேரத்தில் அரசு சர்வதேச சமூகம் சம்பந்தமாக தனது சொந்தச் செயற்பாடுகளை முன்னேற்றகரமான ஒரு விதத்தில் முடுக்கி விட்டிருப்பது முரண் நகையான ஒன்றாகவே இருக்கிறது. காணாமற் போனோர் விடயமாக விசாரணை மேற் கொள்வதற்கு தான் நியமித்திருந்த ஆணைக் [illegible] கள் மற்றும் போர்க் குற்றங்கள் மட்டில் ஆலோசனை வழங்குவதற்காக பிர சித்தி பெற்ற சர்வதேச சட்டவல்லுநர்கள் மூவரை நாட்டிற்கு வரவழைக்கும் அரசாங்கத்தின் தீர்மானம் எதிர்பார்க்கப்படாத ஒன்றாகும். மேலும் ஆணைக் குழுவிற்கான அதிகார வரம்பினை போர்க்குற்றச்சாட்டுக்களையும் விசாரிக்குமளவிற்கு போதுமான விதத்தில் விஸ்தரிக்கப்பட்டதானது அமைச் சரவையின் சிரேஷ்ட அமைச்சர்கள் மத்தியில் வியப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஆரம் பி க்கப்பட்ட 5 வருடங்களுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மிக மோசமான மனிதவுரிமைகளாகவும் போர்க் குற்றங்களாகவும் கூறப்பட்ட இவற்றை எதுவித மாற்றத்திற்கிடமில்லாத விதத்திலும் அரசாங்கம் உறுதியான பிடிவாதத்துடன் மறுத்தே வந்துள்ளது. இதுவரை அரசாங்கத்தால் நடத்தப்பட்ட அனைத்து விசார ணைகளும் அவ்வாறான குற்றங்கள் எதுவும் நிகழவில்லை என்ற அரசாங்கத்தின் நிலைப் பாட்டினையே மீளவும் உறுதி செய்துள்ளது. ஆனாலும் இவை களனைத்தும் போரின் போது மனிதவுரிமை மீறல்களாக இரா ணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களுக்கெதிராக சக இராணுவத்தினராலேயே மேற்கொள்ளப்படும் விசாரணைகளென்பதுடன் சொந்தக் குற்றங்களிலிருந்து அவர்களை விடுவிப்பவையாகவும் இருப்பதால் இவ் விசார ணைகள் சர்வதேச நியமங்களுக்



கும் நம்பகத் தன்மைக்கும் அப்பாற் பட்டவையே ஆகும்.

## முரண்பாடான நிலைகள்

ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் 2014 மார்ச் மாதத் தீர்மானம் இரண்டு பகு களாக செயற்படுத்தப்படவேண்டியதாயிருந்தமை குறிப்பிடத்தக்கதாயிருந்தது.

இதில் முதலாவது இல ங்கை அரசின் கடந்த காலச் செயற்பாடுகள் சர்வதேச நிய மங்களுக்கேற்புடையதாக இருந்தனவா என்பதை அறிந்து கொள்வதற்குரிய விசாரணை ஒன்றுக்கான அழைப்பினை மேற்கொள்வதாக இருந்தது.

இலங்கை அரசா ங்கம் இவ்விதமான விசாரணையொன்றைத் தானகவே நடத்தத் தவறியிருக்குமானால் சுதந்திரமான ஒரு விசாரணையை ஆரம்பிக்குமாறு ஐநா மனிதவுரிமைச்சபை ஆணையாளர் அலுவலகத்திற்கு அழைப்பு விடுத்தலே அதன் இரண்டாவது பகுதி யாகும்.

ஐ.நாவின் சொந்த விசாரணைக்கான மனிதவுரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகம் போர் விசாரணைக்கென பிரபல்யமும் சர்வதேச உயர் நிபுணத்துவமும் நம்பகத் தன்மையுங் கொண்ட 3 சர்வதேச வல்லுநர்களின் மேற்பார்வையில் விசாரணைகளில் இறங் கியதன் பின்னரே இலங்கை அரசின் நிபுணர்கள் நியமனமும் அதனது ஆணைக்குழுவின் ஆணை அதிகார வரம்பு விஸ்தரிப்பும் ஆரம்பமாகியது.

இப்போது தனது மூவர் கொண்ட சொந்த ஆலோசனைக் குழுவை நியமித்ததன் மூலம் இலங்கை அரசானது ஐ.நா. மனிதவுரிமைச் சபை தீர்மானத்தில் முதலாவது செயற் பகுதியை அதாவது இரண்டாவது பகுதியை நடைமுறைப்படுத்தும் தேவையை குறைத்துக் கொள்ளும் நோக்கத்துடனும் நம்பிக்கை எதிர்பார்ப்புடனும் முன்னெடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது போல் தெரிகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நேர காலத்துடன் நிறுத்தப்படும் இரவு நேர பேருந்து சேவைகள்

## சத்தியேந்திரா கவலை தெரிவிப்பு



யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில இரவு நேரங்களில் பேருந்து சேவைகள் நேர காலத்துடன் நிறுத்தப்படுவது குறித்து ஜனநாயக தொழிலாளர் கட்சியின் தலைவர் எஸ். சத்தியேந்திரா மன்னார், முல்லைத்தீவு மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இம்மாவட்டங்களில் இருந்து வெளி மாவட்டங்களுக்கான இரவு நேர பேருந்து சேவைகள் மட்டுமன்றி உள்ளூருக்கான பேருந்து சேவைகளும் நேரகாலத்துடன் நிறுத்தப்படுவது குறித்து ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படாதிருப்பதனால், பொது மக்கள் பெரிதும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.


உள்ளூருக்குள் இரவு நேரங்களில் பயணிப்போர் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து மன்னார், முல்லைத்தீவு மற்றும் யாழ். மாவட்டங்களுக்கு வருவோர் என எல்லோரும், இரவு நேர பேருந்து சேவைகள் இல்லாமையால், தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வதற்கு அதிக பணத்தைச் செலவு செய்து முச்சக்கர வண்டிகளை வாடகைக்கமர்த்திச் செல்லவேண்டிய நிலையே அங்கு காணப்படுகின்றது.

இது குறித்து யாழ். முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட அரச அதிபர்களிடம் தான் சுட்டிக்காட்டியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அந்தந்த மாவட்டங்களின் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவராக இருப்பது, அந்தந்த மாவட்ட அரச அதிபர்களே என்பதால், இரவு நேரங்களில் பயணிப்போரின் நலன் கருதி மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இரவு நேர பேருந்து சேவை மாலை 6 மணி வரையும் அதேபோல யாழ்ப்பாணத்தில் இரவு 8 மணி வரையும் நீடிக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார். (6)

# ஐ.நாவின் விசாரணைகள் சுதந்திரமாகயிருப்பதில்லை

## ஜனாதிபதி மஹிந்த நியமித்த சர்வதேச ஆலோசனைக்குழு உறுப்பினர் தெரிவிப்பு



சிறுவர்களை யுத்தத்திற்கு பயன படுத்தியது மற்றும் மனித கேடயங்களாக பயன்படுத்தியது போன்ற விடயங்களுக்கு கடுமையான தண்டனை கோருவேன் என காணமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள இந்திய மனிதவுரிமை பணியாளர் அவ்டேஸ் கௌசல் தெரிவித்துள்ளார்.

சகலருடைய மனித உரிமையை எவ்வித முற்கற்பிதங்களுமின்றி நிலை நாட்டுவதற்காகவே ஐ.நா. ஏற்படுத்தப்பட்டது. எனினும் சில வேளைகளில் ஐ.நா. முன்னெடுக்கும் விசாரணைகள் சுதந்திரமாக இருப்பதில்லை, தனிப்பட்ட நலன்களை உள்ளடக்கியதாகவும் அவை காணப்படுகின்றன.

ஆகவே ஐ.நா. விசாரணையொன்றை ஆரம்பித்தாலும் கூட அதற்கு புறம்பாக சுயாதீன விசாரணையொன்றை இலங்கை குறித்து மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

சர்வதேச ஆலோசனைக்குழு மேற்கொள்ளும் யுத்த பொறுப்புக்கூறல் விசாரணை சுதந்திரமான பக்கச் சார்பற்ற விசாரணை இடம்பெறுவதை உறுதிசெய்யும்.

பலவந்தமாக காணாமற் போகச் செய்யப்பட்டோர் மற்றும் யுத்தக்குற்றச்சாட்டுகள் குறித்து கவனம் செலுத்துவேன், சிறுவர்களை யுத்தத்திற்கு பயன்படுத்தியது மற்றும் மனித கேடயங்களாக பயன்படுத்தியது போன்ற விடயங்களுக்கு கடுமையான தண்டனை கோருவேன்.

இலங்கையில் நிலவிய சூழ்நிலை குறித்த முழுமையான அணுகுமுறையொன்றை அமெரிக்காவும் ஏனைய மேற்குலக நாடுகளும் எடுக்க வேண்டும். அமெரிக்கா பொலிஸாராக செயற்படுவதை தவிர்க்க வேண்டும். பொதுமக்கள், குழந்தைகள் மீதான அமெரிக்காவின் தாக்குதல்களை நாங்கள் மறக்க முடியாது. யுத்தக் குற்றங்களில் ஈடுபட்ட முக்கிய நாடு அமெரிக்கா எனவும் அவ் டேஸ கௌசல் தெரிவித்துள்ளார். (6)

# கோப்பாய் சந்தியில் கோர விபத்து; மயிரிழையில் தப்பினர் பயணிகள்





வேகக்கட்டுப்பாட்டை இழந்த தனியார் பேருந்து வீதியோரமாகயிருந்த பெயர்ப் பலகையுடன் மோதுண்டு பின்னர் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் பேருந்து பெரும் சேதங்களுக்குள்ளான அதே வேளை சாரதியின் சாதுரியமான செயற்பாட்டால் பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தனர்.

இச்சம்பவம் கோப்பாய் சந்தியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பருத்தித்துறையில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த குறித்த தனியார் பேருந்து கைதடியில் இருந்து வந்த துவிச்சக்கர வண்டி ஒன்றை இடைவிலகிச் செல்ல முற்பட்ட போது மானிப்பாய் வீதியால் கோப்பாய் நோக்கி வந்த முச்சக்கர வண்டி குறித்த பேருந்தை குறுக்கிட்டு சென்றதால் பேருந்து தனது வேகக்கட்டுப்பாட்டையிழந்துள்ளது.

இந்நிலையில் விபத்தை தடுக்கும் வகையில் பேருந்தை செலுத்த முற்பட்ட போதும் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த பேருந்து வீதியோரமாகயிருந்த சீமெந்திலான பெயர்ப் பலகையுடன் மோதியது.

பேருந்தின் பிற்பகுதி பெயர்ப்பலகையுடன் மோதியதில் அப்பெயர்ப் பலகை கடுமையாக சேதமாக்கப்பட்டது.

இந்நிலையில் வீதியோரமாகயிருந்தமின் கம்பங்களுடனும்பேருந்துமோதி பலத்த சேதங்களுக்குள்ளானது. இந்தக் கோர விபத்தில் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர், பயணிகள் எந்தவித ஆபத்துமின்றி தப்பித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6)

# நுளம்பு பெருகும் சூழலை பேணிய 8,650 பேருக்கு எதிராக வழக்கு

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த 8 ஆயிரத்து 650 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் படி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் இவ் வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 50 ஆயிரத்து 421 இடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 6 ஆயிரத்து 769 இடங்கள் நுளம்பு பெருகும் வகையில் இருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இதுபோன்று எதிர்வரும் காலங்களிலும் விரிவான பரிசோதனைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது. (6)

## இலங்கையரைக் கைது செய்ய மலேசியாவிடம் இந்தியா உதவி

இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டமை தொடர்பில் கைதான தீவிரவாதிக்கு எதிரான ஆதாரங்களைத் தருமாறு, மலேசிய அதிகாரிகளிடம் இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

தென்னிந்தியாவில் உள்ள அமெரிக்க மற்றும் இத்தாலிய தூதரங்கள மீது தாக்கதல் நடத்த ஐ.எஸ். ஐ.எஸ் போராளிகள் திட்டமிட்டிருந்தனர்.

இது குறித்து இந்திய தேசிய புலனாய்வு நிறுவனம் (என்.ஐ.ஏ.) விசாரணை நடத்தி வருகிறது. இந்நிலையில், இலங்கையைச் சேர்ந்த முகம்மது சுலைமான் என்ற நபரை இது சம்பந்தமாக மலேசிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அது குறித்த தகவல்களையும், ஆதாரங்களையும் தருமாறு மலேசிய அரசை, தேசிய புலனாய்வு நிறு [illegible] ளது. (6)

## பிரிவுத்துயர் பகிர்வு



### சிவஞானம் நடனகாந்தன்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் நடனகாந்தன் கடந்த 14 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு Gold Smiths Community Centre,Castillon Rd,SE6 1QD,London என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### அலோசியஸ் எட்மன் ஜேக்கப்



யாழ். மவுண்கார்மல் வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட அலோசியஸ் எட்மன் ஜேக்கப் கடந்த 13 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு EgliseSt Marthe, 118 Avenue Jean Jaures- 93500 Pantin (metro Ligne(7) Aubervilliers Pantin Quatre Chemins) என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### குமாரசாமி புண்ணியமூர்த்தி

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாக வும் கொண்ட குமாரசாமி புண்ணியமூர்த்தி நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

### திருமதி நடராசா தையலம்மா



திருநெல்வேலி கிழக்கு கெனடி லேனைச் சேர்ந்த நடராசா தையலம்மா காலமானார். அன்னாரின் பூதவுடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஈராக்கிய பிரதமர் நூரி மலிகி பதவி விலகல்

ஈராக்கிய பிரதமர் நூரி அல் மலிகி அந்நாட்டு அரசாங்கம் எதிர்கொண்டுள்ள அரசியல் நெருக கடியை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் பதவி விலகியுள்ளார்.

ஜனாதிபதியால் புதிய பிரதம ராக நியமிக்கப்பட்டுள்ள ஹைதர் அல் அபாதி அரசாங்கத்தை அமைப் பதற்கு வழிவகை செய்யும் வகையி லேயே அவர் பதவி விலகியுள்ளார். அந் நாட்டு அரசாங்கம் வட ஈராக்கில் முனனேறிவரும் ஐ.எஸ்ஐ.எஸ் போராளி களால் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

பாராளுமன்ற பிரதி சபாநாயகர் களில் ஒருவரான அபாதிக்கு அர சாங்கத்தை அமைப்பதற்கு வழி வகுக்குமாறு மலிகி கடும் அழுத்தத் திற்கு உள்ளாகியிருந்தார்.

இந்நிலையில் ஈராக்கிய அரசா ங்க தொலைக்காட்சியில் அபாதி மற் றும் ஏனைய ஷியா பெரும்பான்மை கட்சியை சேர்ந்த அரசியல்வாதிகளு டன்தோன்றிய நூரிமலிகி, தனது பதவி விலகலை அறிவிப்பதற்கு முன் ஈராக் ஐ.எஸ். ஐ.எஸ்தீவிரவாதி களிடமிருந்து கடும் அச்சுறுத்தலை எதிர்கொண்டு ள்ளதாக தெரிவித்திருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது. (6)

# நேபாளத்தில் கடும் வெள்ளத்தால் ஏற்பட்ட நிலச்சரிவுக்குள் சிக்கி 240 பேர் பலி!

இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் மேற்கு நேபா ளத்தில் ஆறுகளில் கடும் வெள்ளப் பெருகுகு ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் ஊருக்குள் புகுந்த தால் வீடுகள் தண்ணீரில் மிதக்கி ன்றன. எனவே, அங்கிருந்து வெளி யேறிய மக்கள் பாதுகாப்பான இடங் களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற் பட்டுள்ளன.

கடந்த 3 நாட்களாக ஏற்பட்ட நிலச் சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி 85 பேர் பலியாகினர். 46 பேர் காயம் அடைந்துள்ளனர். 113 பேரை காணவில்லை.

நிலச்சரிவு மற்றும் வெள்ளத் தால் 30 மாவட்டங்கள் பாதிக்கப்பட் டுள்ளன. இதனால் நாட்டில் மூன் றில் ஒரு பகுதி பலத்த சேதம் அடை ந்துள்ளது.



கடந்த 2 வாரத்தில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 240 பேர் பலியாகி உள்ளனர்.

நேபாள அரசின் வேண்டுகோளு க்கு இணங்க மீட்பு பணிக்கு இந் தியா உதவியுள்ளது.

ஒரு விமானம் மற்றும் 3 ஹெலிகொப்டர்களை வழங்கியுள் ளது.

மேலும் ரூ.4 கோடியே 80 இலட்சம் நிவாரண உதவியும் அளித்துள்ளது. (6)

# இலஞ்சம் வாங்குவோர் புகைப்படம் பேஸ்புக்கில்

## இலஞ்ச ஒழிப்புத்துறை நடவடிக்கை

பத்து இலட்சம் ரூபாய் இலஞ்சம வாங்கிய வங்கி அதிகாரி கைது! பததாயிரம் ரூபாய் இலஞ்சம் வாங் கிய தாசில்தார் கைது! என்று நாள் தோறும் பல செய்திகள் வெளி யாகின்றன.

இலஞ்சம் வாங்கியதாக பிடி படும ஒவ்வொரு அரசு அதிகாரியும் சிறைக்கு அனுப்பப்பட்டு, பணி யிடை நீக்கமும் செய்யப்படுகின் றனர். இது தொடர்பான கூடுதல் தகவல்களும் மேற்கண்ட செய்தி களில் வெளியாகின்றன.

எனினும், இந்த இலஞ்சப் பேர் வழிகள் சில மாதங்களிலேயே பிணை யில் விடுதலையாகி, பணியிட மாற்றலும் பெற்று வேறோரு ஊரில் தங்களது 'கைவரிசையை' காட்டிக் கொண்டுதான் உள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒகஸ்ட் 16 வரை மும்பை நகரில் மட் டும் இலஞ்ச ஒழிப்பு பொலிசாருக்கு வந்த தகவலையடுத்து, 744 அரசு அலுவலகங்களில் வலை விரி த்து, ஆயிரத்து 99 அரசு அலுவல ர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இவர்களது புகைப்படங்கள் அனைத்தும் 'பேஸ் புக்கில்' பதிவேற்றம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப் படிப்பட்ட ஊழல் பேர் வழிகளை பொதுமக்கள் அடையாளம் கண்டு கொள்ள இந்த முயற்சி பெரிய அளவில் கைகொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (6)

# இந்திய எல்லைக்குள் ஊடுருவி பாகிஸ்தான் மீண்டும் தாக்குதல்

பாகிஸ்தான் இந்திய எல்லை யில் போர் ஒப்பந்தத்தை மீறி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்திய வீரர்களும் திருப்பி தாக்கி தகுந்த பதிலடி கொடுத்து வருகிறார்கள்.


சமீபத்தில் காஷ்மீரில் சுற்றுப் பயணம் செய்த பிரதமர் மோடி பாகிஸ்தான் இந்தியாவுடன் மறை முக போர் நடத்தி வருவதாக குற் றம் சாட்டினார். பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை விடுத்தும் பேசினார். என்றாலும் அதன்பிறகும் பாகிஸ் தான் தாக்குதல் நீடிக்கிறது.

பாகிஸ்தான் படைகள் இன் னும் அத்துமீறலில் ஈடுபட்டது. அதி காலை 2.30 மணி அளவில் காஷ்மீர் மாநிலம் ஜம்மு அருகே ஆர்.எஸ்.புரா என்ற இடத்தில் உள்ள இந்திய எல்லைப்பாதுகாப்பு படை முகாம் மீது பாகிஸ்தான் துப் பாக்கியால் சுட்டது.

உடனே இந்திய வீரர்கள் திருப்பி சுட்டார்கள். இருதரப்புக்கும் கடும் துப்பாக்கி சண்டை நடந்தது. அதன் பிறகு பாகிஸ்தான் படைகள் பின் வாங்கியது. இதனால் எல்லைப் பகு தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 10 நாட்களில் எல்லையில் இடம்பெற்ற பாகிஸ்தானின் 10 ஆவது அத்துமீறல் ஆகும். (6)

# கிணற்றினுள் குழாய்க்கிணறு அமைக்க மக்கள் கோரிக்கை



(கிளிநொச்சி) ஸ்கந்தபுரம் பொதுச்சந்தை யில் அமைந்து ள்ள கிணற்றினுள் நீர் வற்றியதை அடுத்து தமது அன்றாடத் சந் தைத் தேவைக ளைப் பூர்த்தி செய் வதற்கு போது மான நீரை பெற அல்லலுறுவதாக வர்த்தகர்களும் பொதுமக்களும் கவலை தெரிவித் துள்ளனர்.

இப் பொதுச்சந்தையின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு கிணறு மட்டுமே அமைந்துள்ள நிலையில், இவ் வருடம் அதன் நீர் வற்றி யுள்ளது.

ஆகவே வர்த்தகரும் நுகர்வோரும் குடிநீரை வெளியே இருந்து பெற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இக் கிணற்று நீரையே வர்த்தகர்கள் தமது கடைத் தேவைகளுகளுக்கும் குடிநீர் தேவை களுக்கும் போதுமான அளவு பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் தற்போது குடிநீரை பணம் கொடுத்து வெளியிலிருந்து பெறவேண்டியுள்ளதாக வர்த்தகர்களால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே நீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு குறித்த கிணற் றினுள் குழாய் கிணறு ஒன்றை அமைப்பதன் மூலம் தமது நீர் தேவையை பெற்றுக் கொள்ள முடியுமென அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனமெ டுத்து குழாய் கிணறு ஒன்றை விரைவில் அமைத்துத் தருமாறு வர்த்தகர் களால் கோரிக்கை விடப்படுகிறது. (2-27)

# மீள்குடியேறிய மக்களுக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரதிச் செயலாளர் தெரிவிப்பு

(முல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்வின் பின்னர் 5 ஆயிரத்து 500 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ள நிலையில் அம் மக்க ளுக்கு அடிப்படைத் தேவையான குடிநீர் கிணறுகள், பொதுநோக்கு மண்டபம், முன்பள்ளிகள், மலசல கூடங்கள், வீட்டுத் திட்டங்கள் என் பன முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரதிச் செயலாளர்ஸ்குருபரன்தெரிவித்துள் ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில்,

குடிநீர் தேவையைப் பொறுத்த வரையில் தேசிய நீர் வழங்கல் வடி காலமைப்பு சபையினால் ஒட்டு சுட்டா னில் ஐந்து இலட்சம் லீற்றர் நீர் கொள்ளக்கூடிய நீர்த்தாங்கி யொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதனூடாக எதிர்காலத்தில் அண் ணளவாக 5 ஆயிரம் குடும்பங்களு [illegible] முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது குழாய் கிணறுகள் 111 பாவனையிலுள்ள நிலையில் இன் னும் 23 குழாய் கிணறுகள் திருத்தம் செய்ய வேண்டிய நிலையுள்ளது.

பொதுக்கிணறுகள் 27 புதிதாக அமைக்கப்பட்டும் 53 கிணறுகள் திருத்தம் செய்யப்பட்டுமுள்ளது.

மலசலகூடங்களை பொறுத்த வரையில் அரச ரீதியில் 45 உம் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஊடாக 2 ஆயிரத்து 681 ஆக மொத்தம் 2 ஆயிரத்து 726 மலசல கூடங்கள் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

கிராமங்களின் அபிவிருத்தி தொடர் பாக கலந்துரையாடுவது தொடக்கம் ஏனைய பல தேவைகளை நோக் கமாக கொண்டு பொதுநோக்கு மண்டபங்கள் ஆறு புதிதாக அமைக் கப்பட்டுள்ளதுடன் சேதமடைந்த ஒன்று திருத்தம் செய்யப்பட்டும் புதி தாக மூன்று பொது நோக்கு மண்ட பங்கள் அமைப்பதற்கு யு.என்ஹபி ரட் நிறுவனத்தினால் நிதியுதவி கிடைக் கப்பெற்றுமுள்ளது.

முன்னர் உள்ள 17 பொது மண்ட பங்களுடன் சேர்த்து ஒட்டு மொத் தமாக 27 பொது நோக்கு மண் டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முன்பள்ளிகளைப் பொறுத்த வரையில் 29 முன்பள்ளிகள் உள்ளன. இவற்றுள் 8 புதிதாக அமைக்கப்பட் டும் ஏழு திருத்தம் செய்யப்பட்டுமு ள்ளன.

வீட்டுத்திட்டத்தை பொறுத்த வரை யில் 5 ஆயிரத்து 153 புதிய வீடுக ளுக்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் தற்போது 3 ஆயிரத்து 411 புதிய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் குடியேறியுள்ளனர். மிகுதி வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

வன்னியுத்தத்தின் காரணமாக சேதமடைந்த 507 வீடுகளில் 239 வீடுகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக இன்னும் புதிய ஆயிரம் வீடுகளும் 268 வீடுகள் திரு த்தம் செய்யவேண்டியுமுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் பிச்சை எடுக்க மகன்
கும்பகோணத்தில் கோபுரம் கட்டினானாம்.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழ் உறவுகளே! ஒரு கணம் சிந்தியுங்கள்

இராணுவத்தில் இணைந்த தமிழ்ப் பெண் ஒருவர் ஒரு சில தினங்களுக்கு முன்னர் மரணம் அடைந்துள்ளார். குறித்த பெண்ணின் மரணத்திற்குக் காரணம் புற்றுநோய் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

புற்றுநோய்க்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றிருந்த பிரஸ்தாப பெண்மணி தனக்கு ஏற்பட்டுள்ள நோயையும் பொருட்படுத்தாமல் இராணுவத்தில் இணைந்துள்ளார்.

ஒரு பிள்ளையின் தாயான இவருக்கு வயது 23. ஒரு பிள்ளைக்குத் தாய்; இளம் வயது; புற்றுநோய் என்பவற்றை எல்லாம் அவரின் குடும்ப கஷ்டம்–வறுமை என்பன ஓரங்கட்டி விட, இராணுவத்தில் சேர்ந்தேனும் தனது குடும்பத்தைக் காப்பாற்ற அந்த இளம்தாய் தயாரானார்.

இராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற்ற வேளையில் அந்த இளம்பெண் புற்றுநோயால் இறந்தார் என்ற செய்தி சாதாரணமானதல்ல.

தான் ஒரு புற்றுநோயாளி என்று தெரிந்திருந்தும் அந்த ஆபத்தான நோய் பற்றி இம்மியும் கவனம் கொள்ளாமல் ஓர் இளம் பெண் தன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக இராணுவத்தில் சேர்ந்தார் என்பதற்குள் இருக்கக் கூடிய சோகம்; துன்பம் பற்றி நாம் சிந்திப்பது அவசியம்.

இராணுவத்தில் தமிழ்ப் பெண்கள் சேரக் கூடாது என்ற கோசங்கள் எங்களிடம் இருந்த தாயினும் அந்த கோசங்களைக் கடந்து, இராணுவத்தில் சேர்வது என்பதற்குள் இருக்கக் கூடிய வறுமையின் தாக்கம் பற்றி தமிழ் மக்கள், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையினர் சிந்திக்க வேண்டியது அவசியம். 23 வயது. ஒரு குழந்தை. கூடவே புற்றுநோயின் கொடூரம் இவற்றை எல்லாம் தனக்குள் அடக்கிக் கொண்டு ஆசாபாசங்களைத் தூக்கி எறிந்து விட்டு, காக்கி உடை தரித்து முழுநேரமும் பயிற்சி என்ற புண்பாட்டை சுமந்த அந்த இளம் தமிழ்த் தாய் இன்று உயிரோடு இல்லை.

தான் பெற்றபிள்ளையை வளர்த்து எடுப்பதற்காக இராணுவத்தில் சேரும் அளவில் அந்தப் பெண்ணின் குடும்பத்திற்கு எந்த ஆறுதலும் எந்த உதவியும் கிடைக்கவில்லை.

ஐயா! என் நிலைப்பாட்டைப் பாருங்கள் என்று தன் சோகத்தை–கஷ்டத்தைக் கூறி ஆற்றுப்படுவதற்குக் கூட தேர்தல் காலத்து ஐயாமார் வரவில்லை.

என்ன செய்வது? வடக்கு மாகாண சபை பதவி ஏற்ற காலத்தில் இருந்து ஒவ்வொரு நாளும் கழுத்து மாலைக்குக் குறைவேயில்லை என்ற மகிழ்வோடு காலம் போக்குகிறது.

தவணைக்கு ஒரு தடவை கைதடியில் கூடி தீர்மானம் பல நிறைவேற்றி உலக சாதனையை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

மறுபுறத்தில் புலம்பெயர் உறவுகள், கோபுரம் கட்டக் கோவில் தேடித் திரிகின்றனர். இன்னுமொரு சாரார் மதம் மாற்றி, வயல்வெளி எங்கும் தேவாலயம் கட்டி மதவாத நோய்க்கு மருந்து கிடைத்த நிம்மதியில் வான் முழக்கம் இடுகின்றனர்.

ஆனால், இங்கோ! ஓர் இளம்பெண்; அம்மா பசிக்குது என்று அழும் தன் பாலகனுக்காக புற்றுநோயின் கொடூரத்தையும் பொருட்படுத்தாமல் காக்கி உடை தரித்து கானகத்து மைதானத்தைச் சுற்றிச் சுற்றி ஓடுகிறது.

அந்தோ! பயிற்சியின் பளு புற்றுநோயின் மரண நோக்கை இலகுபடுத்த, அந்த குழந்தையை அநாதையாக்கி விட்டு நித்தியமாக உறங்குகிறாள் அந்த இளம்தாய்.

அரசியலும் அது. எங்கள் மனங்களும் அது என்றாகி விட்ட பின்னர் இறைவா! நாம் என் செய்வோம்.

# விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை மீட்க முயற்சிக்கிறோம்

## பொன். இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை சிறையில் இருந்த தமிழக மீனவர்கள் 94 பேரும் விடுவிக்கப்பட்டு தாயகம் திரும்பியுள்ள நிலையில், இந்த மீனவர்களின் படகுகளையும் மீட்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று ஞாயி ற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் மேலும் குறிப்பிடுகையில், இலங்கை கடற படையின் தாக்குதல் நடவடிக்கைகளில் இருந்து தமிழக மீனவர்களை பாது காக்கவும், கடலில் மீன்பிடிக்க செல்லும் மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணவும் தொடர்ந்து முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மீனவர் பிரதிநிதிகளுடன் 16-ம் திகதி இடம்பெற்ற ஆலோசனை கூட்டத்தில் மீனவர்கள் சந்திக்கும் பிரச்சினை கள் மற்றும் தீர்வுக்கான வழிமுறை கள் தொடர்பில் விரிவாக ஆலோசிக்க ப்பட்டது.

இந்த பேச்சுவார்த்தையின் மூலம் மிகப்பெரிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தலைமுறை தலைமுறையாக நமது மீனவர்கள் நிம்மதியாக மீன்பிடித்து வருவதற்கான சூழ்நிலையை உருவாக்குவோம். நிரந்தர தீர்வை நோக்கி பயணித்து கொண்டிருக்கிறோம். நிச்சயம் வெற்றி அடைவோம் என்ற முழு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்த வெற்றியின் பங்கு தமிழக முதலமைச்சர் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் உண்டு.

அதேவேளை, மீனவர் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் விபரங்களை மத்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளேன்

டில்லி சென்றதும் பிரதமர் மோடியை நேரில் சந்தித்து மீனவர் பிரச்சினைகளையும், தீர்வுக்காக அவர்கள் வைத்துள்ள கோரிக்கைகளையும் விளக்கிக் கூறுவேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளை அவர்களிடம் மீண்டும் கையளிக்கப் போவதில்லை என இலங்கை கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்திருந்த நிலையிலேயே மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை புதுடில்லியில் எதிர்வரும் 29ஆம் திகதி இலங்கை, தமிழக மீனவர் பிரதிநிதிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தை இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## படகுகளை விடுவிக்க வாய்ப்புக்கள் இல்லை –ராஜித

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்க வாய்ப்புக்கள் இல்லை என்று இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த 94 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு இது தொடர்பில் தகவல் வழங்கிய அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள 63 படகுகளையும் விடுவிக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை என்று குறிப்பிட்டார்.

இந்த படகுகள் கடந்த யூன் மாதம் முதல் யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இதே வேளை இராமநாதபுரம், இராமேஸ்வரம, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டிணம் மற்றும் காரைக்கால் ஆகிய இடங்களின மீனவர்கள் நேற்றுமுன்தினம் பாரதிய ஜனதாக் கட்சியின் அலுவலகத்தில் வைத்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ம.உ ஆணைக்குழுவில் மாணவர்கள் முறைப்பாடு

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளனர்.

இரண்டு தமிழ் மாணவர்கள் கடந்த 9 ஆம் திகதியன்று பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டமை தொடர்பிலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மாணவர் தலைவர் ரசிந்து ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் கடந்த புதன்கிழமையன்று இரண்டு மாணவர்களை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார் தம்மை தாமே காயப்படுத்திக் கொண்டதாக கூறி மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்தே ஏனைய இரண்டு மாணவர்களும் கைது செய்யப்பட்டனர். இயல்பற்ற சூழ்நிலையை ஏற்படுத்த முயன்றனர் என்று குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

எனினும் இந்தக்குற்றச்சாட்டை தாம் மறுப்பதாக பல்கலைக்கழக மாணவர் தலைவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## குழு மோதல் ஒருவர் படுகாயம்

பருத்தித்துறை 2ஆம் குறுக்குத் தெருவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரண்டு குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற மோதலில் படுகாயமடைந்த ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் தும்பளையைச் சேரந்த தெய்வேந்திரன்ஶ்ரீ ரங்கன் (வயது 22) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவரைக் சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாக தெரிவித்தனர்.

மேலும், இந்தக் கைகலப்புச் சம்பவததில் யாழ் - கொழும்பு தனியார் பஸ் ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது. (செ-60)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**18.08.2014 இற்கான வினா**
**சின்மயம் என்றால் என்ன?**
**17.08.2014 இற்குரிய கேள்வியும் விடையும்**
**ஓம் நமசிவாய எனும் ஶ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தின் சிறப்புக்கள் எவை?**
**ஓம் எனும் பிரணவ மந்திரத்தை அடிக்கடி உச்சரிப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?**

☞ உடலளவில்– குரல் வளம், நோயற்ற வாழ்வு, நீண்ட ஆயுள் என்பன கிடைக்கும்
☞ மனதளவில்– அமைதி, ஒருநிலைப்பாடு ஏற்படும்
☞ புத்தியளவில்– புத்திக்கூர்மை, ஞாபகசக்தி அதிகரித்து முகத்தில் தேஜஸ் (ஒளி) அதிகரிக்கும்


மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## தவமும் அறிவும்



தவத்தையும் அறத்தையும் நீங்கள் மிகச் சுலபமாகப் பற்றிச் செல்லும் முறையினை இப்போது உங்களுக்குச் சொல்கின்றேன். தவம் எதற்காக என்றால் இறையுணர்வு பெற்று இறைவனோடு உறைவதற்காக. அறம் எதற்காக என்றால் இதுவரையில் செய்த கர்மங்களின் அழுத்தத்தினால் எண்ணமும் செயலும் தோன்றிக் கொண்டே இருக்கின்ற னவே, அதிலிருந்து செய்து செய்து நல்லனவே செய்யக்கூடிய அளவுக்குத் தீயன செய்யாது இருக்கக்கூடிய ஒரு தூய்மைக்கு வரவேண்டும்.

மனத்தூய்மை தவத்தினால் வரும், வினைத்தூய்மை செயலினால் வரும், நல்ல செயல் அறத்தினால் வரும். அதனால் இது வேண்டும். இந்த இரண்டையும் ஒருங்கே பார்ப்பதற்கு என்ன வேண்டும்? இந்தக் காலத்திற்கு வேண்டியது அதுதான். அந்த அறம், தவம் இவற்றை வைத்துத் தான் இதுவரையில் இந்த உலகத்திலே ஏற்பட்ட மதங்களெல்லாம் அமைந்துள்ளன.

எந்த மதத்தை எடுத்துக்கொண்டாலும் இறை– உணர்வைக்காட்டி அற– உணர்வை காட்டிடுவதாகவே இருக்கும். இந்த இரண்டும் தான் எல்லா மதங்களிலும் உள்ளன. இறை உணர்வுக்கு இறை வழிபாடு. உலக மக்களோடு தொடர்புகொண்டு இனிமையாக– அதாவது ஆங்கிலத்தில் Harmony என்று சொல்கின்றோமோ அவ்வாறு– வாழ்வதற்கு என்ன வேண்டும். ஒழுக்கம், கடமை, ஈகை என்ற அறம் வேண்டும். இந்த அறநெறி உலக வாழ்க்கைக்கு அவசியம்.

தவநெறி, உளப்பயிற்சி, அறிவு மேன்மை இறைவனை அடைய இவை வேண்டும். இதுவரையில் மதங்களிளெல்லாம் அந்த உணர்வை ஏற்படுத்துவதற்காக இதெல்லாம் சொன்னார்கள். இப்பொழுது அதை விட இன்னும் இந்த விஞ்ஞான யுகத்திலே மிகவும் சுருக்கமாகத் தெரிய வேண்டுமானால் என்ன– அந்தச் செயலிலே சிவனைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்னாவுக்கு பத்மபூசன் விருது



இந்திய நாட்டின் 3 ஆவது உயரிய விருது பத்மபூசன் விருதாகும். கலை, இலக்கியம், மருத்துவம், சமூக நலன், விளையாட்டு உட்பட துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு இந்த விருது வழங்கப்படும்.

இந்தியாவின் 'நம்பர்1' பேட்மிண்டன் வீராங்கனையான சாய்னா நேவால் பெயர் பத்மபூசன் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மத்திய விளையாட்டு அமைச்சகத்திடம் அவரது பெயரை இந்திய பேட்மின்டன் சங்கம் பரிந்துரை செய்துள்ளது. இதை பேட்மின்டன் சங்க நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

இந்த பரிந்துரையை விளையாட்டு அமைச்சகம், மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கும்.


ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற ஒரே இந்தியர் சாய்னா நேவால் ஆவார். 2012 ஆம் ஆண்டு லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் அவர் ஒற்றையர் பிரிவில் வெண்கல பதக்கம் வென்றார். பிரிமியர், சுப்பர் சிரீயஸ் கிராண்ட்பிரி உட்பட 20 சர்வதேச பட்டங்களை வென்று அவர் முத்திரை பதித்து உள்ளார்.

24 வயதான சாய்னா நேவால் ஏற்கனவே பத்மஸ்ரீ விருதை 2010 ஆம் ஆண்டு பெற்று இருந்தார். மேலும் ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதையும் (2010), அர்ஜுனா விருதையும் (2009) பெற்று இருந்தார்.

இந்த ஆண்டுக்கான பத்மபூசன் விருதுக்கு விளையாட்டு துறையில் பரிந்துரை செய்யப்பட்ட 2 ஆவது நபர் சாய்னா நேவால் ஆவார். இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் டோனியின் பெயரும் இந்த விருதுக்கு ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# சின்சினாட்டி டென்னிஸ்

## இறுதிப் போட்டியில் பெடரர்



அமெரிக்காவில் உள்ள சின்சினாட்டி நகரில் சர்வதேச டென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் இறுதிப்போட்டியில் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) -டேவிட் பெரர் (ஸ்பெயின்) மோதுகிறார்கள்.

பெடரர் அரைஇறுதியில் 6-2, 6-3 என்ற கணக்கில் ரோனிக்கை (கனடா) வீழ்த்தினார்.

பெண்கள் இறுதிப் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா)- இவானோவிக் (செர்பியா) மோதுகிறார்கள்.

செரீனா அரை இறுதியில் 2-6, 6-2, 6-4 என்ற கணக்கில் வோஸ்னி யாக்கியையும், இவானோவிக் 6-2, 7-5, 7-5 என்ற கணக்கில் ஷரபோவாவையும் தோற்கடித்தனர்.

# இரண்டாவது இன்னிங்சில் சிறப்பாக துடுப்பெடுத்தாடுவோம்

## அஸ்வின் நம்பிக்கை



இந்தியா- இங்கிலாந்து அணிகள் மோதும் 5 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்திய அணி முதல் இன்னிங்சில் 148 ரன்னில் சுருண்டது.

இந்த டெஸ்ட் குறித்து அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

2 ஆவது நாள் ஆட்டம் எங்களுக்கு ஏற்ற வகையில் அமையவில்லை. பிட்ச் சமநிலையாக சீராக இருந்தது என்றாலும் நாங்கள் விக்கெட்டுகளை கைப்'ற்ற கடுமையாக போராடினோம். 2 ஆவது இன்னிங்சில் நாங்கள் சிறப்பாக பேட்டிங் செய்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. என்னால் எவ்வளவு சிறப்பாக பந்து வீச முடியுமோ அதைதான் வெளிப்படுத்தினேன்.

இவ்வாறு அஸ்வின் கூறியுள்ளார். (க)

# தடகள வீரர்களுக்கான பயிற்சி முகாம்

## அடுத்த மாதம் ஆரம்பம்

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ள தடகள விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள வட மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் வீர, வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாம் இந்த மாத இறுதியில் தென்னிலங்கையில் ஆரம்பமாகவுள்ளது.


இந்தப் பயிற்சி முகாமுக்கான ஏற்பாடுகளை வடமாகாண கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக வடமாகாண கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முதல் தடவையாக இந்தப் பயிற்சி முகாம் தென்னிலங்கையில் நடைபெறுகின்றது.

தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள சிந்தெட்டிக் பயிற்சித் திடலிலேயே இந்தப் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

இதுவரை காலமும் இத்தகைய பயிற்சிகள் தென்னிலங்கையில் இருந்து அழைத்து வரப்படும் தேசிய பயிற்றுவிப்பாளர்களையும் உள்ளூர் பயிற்றுவிப்பாளர்களையும் இணைத்து இந்தப் பய ற்சி முகாம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்று வந்தது குறிப் பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்





உலகத்தமிழர் பூப்பந்தாட்ட பேரவை பிரான்ஸ் தமிழர் உள்ளரங்க விளையாட்டு அமைப்புக்களின் அனுசரணையுடன் வடமாகாண விளையாட்டு அமைச்சினால் திறந்த நிலை பூப்பந்தாட்ட போட்டியொன்று அண்மையில் வெகுசிறப்பாக பல்கலைக்கழக உள்ளக அரங்கில் நடைபெற்றுள்ளது. இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக சுவிஸ் தமிழர் சதுரங்க அமைப்பின் நிர்வாகியும் மேற்படி அனுசரணை அமைப்புக்களின் இணைப்பாளருமான கந்தையா சிங்கம் மற்றும் வடமாகாண அமைச்சின் அதிகாரிகள், விளையாட்டுத்துறை பயிற்சியாளர்கள், விரிவுரையாளர்கள், விளையாட்டு வீரவீராங்கனைகள் என பெருமளவானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வெற்றிபெற்ற வீரவீராங்கனைகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள் சான்றிதழ்களை வழங்கி வைத்தார். அந் நிகழ்வுகளின் படங்களை காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க...

யின் உதவி ஆளுநர் பி நந்தலால் வீரசிங்க கையொப்பமிட்டுள்ளார்.

லிபட்டி நிறுவனத்தின் சார்பில் கொன்னி மார்க் என்பவர் கை யொப்ப மிட்டுள்ளார்.

இந்தநிலையில் குறித்த உடன் படிக்கை ஓகஸ்ட் முதலாம் திகதி யில் இருந்து 2015 ஜூலை வரை யில் நடைமுறையில் இருக் கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின்படி இலங்கை தொடர்பில் சரியான தக வல்கள் அமெரிக்காவுக்கு கிடைக்க செய்யப்படவுள்ளன.

ஏற்கெனவே இலங்கை அரசா ங்கம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வுடன் நெருங்கி செல்லும் நோக்கு டன் பல உடன்படிக்கைகளை பல மில்லியன் டொலர்கள் செலவில் மேற்கொண்டமை தொடர்பில் தக வல்கள் வெளியாகியிருந்தன. (செ-11)

## இலங்கை...

இது தொடர்பாக தெரிவிக்கையில்,

மருத்துவச்சபை, ஆயுர்வேத மரு த்துவ கட்டளைச் சட்டம் மற்றும் ஹோமியோபதி மருத்துவம் ஆகிய வற்றின் கீழ் பதிவு செய்யாத எவரு க்கும் சிகிச்சை அளிக்கும் நடவடி க்கைகளில் ஈடுபட முடியாது.

நாட்டில் சகல பிரதேசங்களிலும் தனியார் மருத்துவ சேவைகளில் ஈடுபடும் நபர்களில் 26.4 வீதமான வர்கள் போலி மருத்துவர்கள் என வும் அளுத்கே குறிப்பிட்டுள்ளார்.

அதிகளவான போலி மருத்து வர்கள் கம்பஹா மாவட்டத்திலேயே உள்ளனர். அங்கு 35 வீதமான மரு த்துவர்கள் போலி மருத்துவர்கள் என வும் அவர் மேலும் கூறியுள்ளார். (செ-11)

## அஜித்குமார்...

கடற்படை ஆண்டு தோறும் நடத்தி வரும் காலி கடல்சார் பாதுகாப்புக் கருத் தரங்கு இந்த ஆண்டு டிசம்பர் மாதம 1-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இரண்டு நாட்கள் இடம்பெறவுள்ள இந்த கடல்சார் பாதுகாப்பு கருத்தர ங்கில் இந்தியாவின் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அண்மை யில் நியமிக்கப்பட்ட அஜித்குமார் டோவல் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கருத்தரங்கின் முதல் நாள் அமர்வில் சிறப்பு உரையாற்ற அஜித்குமார் டோவலுக்கு இலங்கை பாதுகாப்பு அமைச்சு அழைப்பு விடு த்துள்ளது. ஆயினும், இந்தப் பயண த்தை அஜித் குமார் டோவல் இது வரை உறுதிப்படுத்தவில்லை என்று அறியமுடிகிறது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அஜித்குமார் டோவல் நியமிக்கப்பட்ட பின்னர் அவரது இலங் கைக்கான முதலாவது விஜயம் இது என்பது கவனிக்கத்தக்கது. (செ-11)

# இங்கிலாந்தின் வேட்டையில் மண் கௌவியது இந்தியா




இங்கிலாந்துக்கு எதிரான 5-வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 244 ஓட்டங்க ளால் படுதோல்வி அடைந்து 3-1 என்ற கணக்கில் தொடரையும் மீண்டும் இழந்துள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம மேற்கொண்டுள்ள தோனி தலை மையிலான இந்திய கிரிக்கெட் அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வரு கிறது. இதில் இங்கிலாந்து அணி 2-1 என்ற நிலையில் முன்னிலை வகித்தது.

இந்நிலையில் 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் கென்னிங்டன் ஓவல் மைதானத் தில் நடைபெற்றது. முதலில் ஆடிய இந்திய அணி மிகவும் மோசமாக விளையாடி 148 ரன்கள் எடுத்து ஆல் அவுட் ஆனது. இதை தொடர் ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி ஆட்ட நேர முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 385 ரன்கள் எடுத்து இருந்தது.

இந்நிலையில் 3-வது நாள் ஆட் டத்தை தொடர்ந்து ஆடிய இங்கி லாந்து அணி 486 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அந்த அணியின் நடுவரிசை ஆட்டக்காரரான ஜோ ரூட் அபாரமாக விளையாடி 149 ரன்கள் குவித்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். ஸ்டுவேர்ட் ப்ராட் தன் பங்குக்கு அதி ரடியாக விளையாடி 21 பந்துகளில் 37 ரன்கள் குவித்தார். இங்கிலாந்து அணியை விட 338 ரன்கள் பின் தங்கிய இந்திய அணி தனது 2-வது இன்னிங்ஸை நேற்று தொடங்கியது.

இங்கிலாந்து அணி வீரர்களின் பந்து வீச்சை தாக்கு பிடிக்க முடியா மல் இந்திய வீரர்கள் அடுத்தடுத்து சொற்ப ரன்களில் ஆவுட் ஆக 94 ரன்களில் சுருண்டது இந்தியா. இத னால் ஒரு இன்னிங்ஸ் மற்றும் 244 ரன்கள் வித்தியாசத்தில் இந் திய அணி படுதோல்வி அடைந்தது. இந்திய வீரர்களில் அதிகபட்சமாக பின்னி 25 ரன்களும், கோலி 20 ரன்க ளும் எடுத்தனர். இந்த வெற்றி யின் மூலம் இங்கிலாந்து அணி 3-1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சதம் அடித்த இங்கிலாந்து அணி யின் ஜோ ரூட் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்நாயகர்களாக இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சா ளர் ஜேம்ஸ் ஆண்டர்சனும், இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர புவனேஸ்வர் குமாரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (க)

# வெற்றியின் அருகில் இலங்கை




இலங்கை, பாகிஸ்தான் அணிக ளுக்கிடையில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றியை அண் மித்துள்ளது. நான்காம் நாள் நிறை வில் 271 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பாடி வரும் பாகிஸ் தான் அணி 7 விக்கெட்களை இழ ந்து 127 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ஆஷாட் சபிக் 32 ஓட்டங்க ளைப் பெற்றார். சப்ராஸ் அஹமட் 38 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் ரங்கன ஹேரத் 4 விக்கெட் களையும், தம்மிக்க பிரசாத் 2 விக் கெட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சில் 282 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் குமார் சங்ககார 59 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்த்தன 54 ஓட்டங்க ளையும் பெற்றனர். பந்துவீச்சில் சைட் அஜ்மால், வஹாப்ரியாஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்களை யும், அப்துர் ரெஹ்மான் 2 விக்கெட் களையும் கைப்பற்றினர். பாகிஸ் தான் அணி தமது முதல் இன்னி ங்சில் 332 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்களையும் இழந்தது. சப்ராஸ் அஹமட் தனது கன்னிச் சதத்தைப் பெற்றுக் கொண்டார். 103 ஓட்டங்களை அவர் பெற்றுக் கொண் டார். அஹமட் செஷாட் 58 ஓட்டங் களைப் பெற்றுக் கொண்டார். ரங் கன ஹேரத் பந்துவீச்சில் 9 விக்கெட களைக் கைப்பற்றிக் கொண்டார்.

முன்னதாக இலங்கை அணி தமது முதலாவது இன்னிங்சில் சகல விக்கெட்களையும் இழந்து 320 ஓட்டங்களைப் பெற்றது. இதில் உப்புல் தரங்க 92 ஓட்டங்களை யும், கௌஷால் சில்வா 41 ஓட்டங்களை யும், அஞ்சலோ மத்தியூஸ் 39 ஓட்ட ங்களையும் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் ஜுனைட் கான் 5 விக்கெட் களையும், வஹாப் ரியாஸ் 3 விக் கெட்களையும் கைப்பற்றினர்.

இலங்கை அணி வெற்றி பெறு வதற்கு இன்னும் 3 விக்கெட்டு க்கள் கைப்பெற்ற வேண்டும். போட டியின் ஐந்தாவதும் இறுதியுமான நாள் இன்றாகும். இப்போட்டியுடன இலங்கை அணியின் சிரேஷ்ட வீரர்மஹேலஜெவர்த்தன ஓய்வு பெறு கின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## 29ஆம்...

சினைக்கு நிரந்தர தீர்வை காணும வகையிலேயே இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகள் மற்றும் இலங்கை கடற்படையினரின் கைது என்பவ ற்றை கருத்திற்கொள்ளாது இலங்கை கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்கிறது என்றும் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தநிலையில் அதிகாரிகள் மட்ட பேச்சுவார்த்தையே இந்த மாதம் புதுடில்லியில் இடம்பெறவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ-11)

## இன...

கிக் கொண்டிருக்கின்ற பொது பல சேனா போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களை ஏன் அரசாங்கம் இன்னும் கைது செய்யாமல் இருக் கின்றது.

அரசியலமைப்புக்கு எதிராகப் பேசுகின்றவர்களை ஏன் கைது செய்யக் கூடாது. இந்த நாட்டின் எல் லாச் சமயத்தவரையும் சரிசமமாக மதிக்க வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டுமென இலங்கை அரசியல் அமைப்பு எடுத்துக் கூறுகின்ற போது இலங்கை ஒரு பௌத்த நாடு பௌத்த மக்கள் தான் இங்கு வாழ முடியு மென்று கூறுகின்ற இனவாத அமைப் புகள் பற்றி நாம் என்ன செய்ய முடியும்?

சிங்களப் பேரினவாதச் சிந்தனை யுடன் செயற்பட்டுக் கொண்டிருப்ப வர்கள் பொது பல சேனா போன்ற அமைப்புக்களாகும்.

எனவே இவ்வகை அமைப்புக் கள் எதைக் கூறிக்கொண்டிருந்த போதும் உண்மைகள் பொய்யாகப் போவதில்லை. அநீதிகள் நீண்ட காலம் நிலைகொள்வதில்லை.

ஆகவே என்னைக் கைது செய் யும்படி பொது பல சேனா கூறுவதைக கேட்டு நான் கவலை கொள்ளவு மில்லை. ஆத்திரப்படவுமில்லை. நான் எப்போதும் இனவாதம் கொண்ட போக்கில் நடந்ததுமில்லை, நடப் பதுமில்லை. எல்லா மதங்களையும் மேன்மையான மதங்களாக மதிக் கும் சிந்தனை கொண்டவன்.

பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் விரும் பினால் நேரடியாக என்னோடு கதைக்கட்டும். உரிய விளக்கத்தைக் கொடுக்க நான் காத்திருக்கின்றேன். அவர் என் மீதுள்ள குற்றத்தை எடுத் துக்கூறி நான் குற்ற மிழைத்தேனா? நாட்டைக் காட்டிக் கொடுத்தேனா? என் பதை கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும் என அவர் குறிப்பிட்டார். (செ-11)

## விடுதலைப்...

இவ்வாறான சூழ்நிலையில், விடுதலைப் புலிகளின் தோல்வி யானது, ஐரோப்பா மற றும் அமெரிக்கா உட்பட சில நாடுகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தோல்வியின் துக்கத்தில் இருந்து மீளவே தற்போது பல சர் வதேச சதித்திட்டங்கள் உருவா க் கப்பட்டுள்ளன எனவும் அனுர பிரியதர ஷன யாப்பா குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மீண்டும்...

லாக மழை பெய்து வருகின்றது.

இதேவேளை, இன்று மாலை வேளையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்வதற் கான சாத்தியம் உள்ளதாக வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (செ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கராசா யோகேஸ்வரி



விடத்தற்பளை மிருசுவிலை வசிப்பிடமாக கொண்ட தங்கராசா யோகேஸ்வரி நேற்று ஞாயிற் றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி பாறுப்பிள்ளை தம்பதியினரின் மகளும் தங்க ராசாவின் அன்பு மனைவியும் பாக்கியம், செல்லம்மா, சேதுப் பிள்ளை, தியாகராசா, செல்வ ராசா ஆகியோரின் சகோதரியும் சிவபாலன், சிவபாமா, சிவலோ யினி, சிவரதன், சிவரஜீவ் ஆகி யோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் இன்று திங்கட்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தம்பாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விடத்தல் பளை, மிருசுவில் தகவல்: குடும்பத்தினர் (7437)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை தாருங்கள்...

அணிசாராத முன்மாதிரியான கலை இலக்கிய மாமன்றமான உங்கள்
'திசைகாட்டியின் கலை இலக்கிய வட்டம்'

தான் பெருமையுடன் வெளியிடவுள்ள கவிதைத் தொகுப்பிற்காக ஈழத்துக் கவிஞர்களிடமிருந்து நல்ல தரமான காத்திரமான படைப்புக்களை எதிர்பார்த்து நிற்கின்றது. 30.08.2014 இற்கு முன் எம்மை வந்தடைதல் வேண்டும்.



(7435)

செல்வி.இந்துஜா
பிரதம நிறைவேற்று அதிகாரி

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175.பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம்
021 499 3502

# ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் (O/L), (A/L) மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கும் தொழில் புரிப வர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
M.Rajan -0772286054

(7432)

# மீண்டும் சாதனை படைத்தது வெற்றித்தேர்வு

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சாதனை படைப்பதற்கு மீண்டும் வழிவகுத்துள்ளது வெற்றித்தேர்வு வினாப்பத்திரம். மாணவர்களிடமிருந்து கிடைக் கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் வெற்றித் தேர்வு வினாப்பத்திரத்தில் வந்த அத்தனை வினாக்களுமே இறுதிப்பரீட்சை வினாத்தாளில் இடம்பெற்றிருந்தன. அவற்றை முழுமையாகப் பயன்படுத்திய மாணவர்களுக்கும் வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

வெற்றித்தேர்வு வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.

SPEED LANKA EXPRESS

# வெளிநாடுகளுக்கான

## தபால் பொதிகள் சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

(C-8217)

# முக்கிய அறிவிப்பு

GUINNESS WORLD RECORDS

உலக சாதனை நிகழ்வு மார்கழி 01 ஆரம்பம். இடம் : சாவகச்சேரி, ஏ9 பிரதான வீதி. 50 பரப்பளவு கொண்ட காணியில் இச்சாதனை இடம்பெற உள்ளது.

01 வருடகாலத்துக்கு இது இடம்பெறும். அதற்குள் சிற்றுண்டி சாலைகள் குத்தகைக்கு விடப்பட உள்ளது. ஆர்வம் உள்ளவர்கள் இந்த இடத்துக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி : இல. 426 (780), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல : 021 730 6070

(C-8224)

BCHS

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

## After A/L What Next???

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

## Spoken English With Grammar - Quick Learning Course

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

## Diploma In English

Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

## B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

Duration: (2 Months)

## IELTS Acadamic/General

We do Official Online Registration for Exam Candidates

Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

We gurantee success rate 6.5 band and above

## A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Duration: (2 Months)

20.08.2014 @ 9.00 am
23.08.2014 @ 9.00 am
25.08.2014 @ 3.00 pm
27.08.2014 @ 9.00 am

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel :021 222 4550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

# தென்னிந்திய யாத்திரை

நாட்கள் 12 யாத்திரீகர் 10 ஆரம்பம் 10.09.2014

மலைக்கோட்டை விநாயகர், பஞ்சபூதத் தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, நவக்கிரக ஆலயங்கள், மேல் மருவத்தூர், அழகர் கோவில், பொற்கோவில், மீனாட்சி, சுந்தரேஸ்வரர், நவபாஷணம், ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், சமயபுரம், பார்த்த சாரதி, மாங்காடு, திருவேற்காடு, வெக்காளி அம்மன், தன் வந்திரி விஷ்ணு, இரத்தின கிரிமுருகன், திருகடையூர், சக்தி அம்மன், வலம்சுழி விநாயகர், பிரித்திவிலிங்கா தேவி, சென்னை சீரடி பாபா, ஐயப்ப சுவாமி, உப்பிலியப்பன், அலமேலுமங்கா உட்பட 45 இற்கும் மேலான ஆலயங்களை தரிசிக்கலாம்.

விமான ரிக்கற், மூன்று வேளை உணவு, தரமான தங்குமிடம், AC வாகன வசதி, குடிநீர், எயார் போட் போக வர வாகன வசதி உட்பட விபரங்கட்கு:

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
T.P: 0777680102, காலை 10.00 To மாலை 3.00 வரை
0113030806 தொடர்பு கொள்க.

(C-8228)

Digital

# இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்

## பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101

(C-8218)

# SYLO ஐஸ் கிறீம் SWEET YOUR LIFE ORBIT

உங்கள் அபிமான SYLO ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் இம்முறை நல்லூரில் இல. 251C பருத்தித்துறை வீதியில் (கோயில் முன்புற வீதி) தமது விற்பனை நிலையத்தை அமைத்துள்ளதுடன் பிரதி வெள்ளிக்கிழமை சந்நிதி முருகன் கோவிலிலும் ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர கோவிலிலும் தமது விசேட விற்பனை வாகனத்தை நிறுத்தியுள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றார்கள்.



இவ்விளம்பரத்தை எடுத்து வந்து இலவசமாக உங்களுக்கான 25/- பெறுமதியான ஐஸ் கிறீமை சுவைத்து மகிழுங்கள்

தரம், சுவை, சுகாதாரம் விரும்புபவர்கள்
ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்

021 492 6003

SYLO FOOD & BAVAREGES (Pvt) Ltd
இல. 76, அம்மன் கோவில் வீதி
கொக்குவில், கிழக்கு

7207


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org